ரெந்தையுன்சரணமென்றுணங்குறைந்திடவிறைவன்சொல்வான். (௨௨)

புரந்தரன்சினத்தினேவப்பொழியுஞ்சீமூதமெய்யா
மரந்தைநீரொழிந்திரஞ்சலெனாவாக்கருளியையன்
கரந்தனிற்கோடற்பூவையேந்தியகாட்சிதோன்றப்
பெருந்தடவரையைநொய்தினெடுத்தனன்பெருமையோங்க. (௨௩)

வேறு. உயர்ந்தகோவர்த்தனகிரியையோர்கையா
லயந்தடவரைமிசைபுரளவாயர்கள்
பயந்திடும்பருவரலொழியப்பாருளோர்
வியந்திடவேந்தினன்விண்ணுளோர்தொழ. (௨௪)

பருவனாயேந்தியபரமனையனைத்
தெருமரலொழிந்திவண்சேர்மினென்றது
மரிவையர்பொதுவரானிரைகள்கன்றுகள்
வெருவரலொழிந்தவண்வரையினெய்தினர். (௨௫)

சீதைதயிறுவந்தவந்திராமன்சேர்ந்தனன்
மைந்தனின்றேந்தியவனாயைநோக்கியே
புந்தியின்மகிழ்ந்திடப்புனிதன்கூறுவான். (உசு)

வேறு. சிறியனென்றென்கைகதுனறம்வீழுமொவென்றுசிந்தை
மறுகிடவேணடாமிந்தமாலவனாவாஞேக்கெலலா
மிறைவனினதிகம்நோய்தினென்கரததிருககுமென்று
மறிதிர்நீரளிததவனனமருநதியதெயவமென்றுன. (உஎ)

எனறவர்க்கிவைமொழிநதேயிளங்கிலாமுறுவரேன்றக
குன்றினையெநதினின்றுன கோவலககுரிசிலமமா
வன்றெருகுழவியாகியணடஙகளவயிறறுளவைததா
னின்றவனவளாநதுநீனருலொருவனாயெநதலாஞே. (உஅ)

பொடிடடமரஙகளெல்லாமபொறியுகவனாயினமீதின
வெடிபடுமணடமென்னவெணிலமழையேறுவீழக
சடகரிகஈரமபோலவீழநதாரைசொளமாரியோடு
மிடைவிடாதேழுநாளசஙபொழிநதனவெழிலிமனஞே. (உகூ)

நன்னெறியநிறநதுபுல்னைசன்யடகிராமற
றனனிகரிலாதசோதிதனபெயரோதுவானை
முனனுறுமிறபிறசெயதநீவினைமுறகிலு
மன்னிடாவாறுபொரிமமாரிடமலமெலநாரிலகே. (ங0)

ஊழியிறபெயபுமேகமேழுநாளோயவிலலாம
லாழியைங்காநதுவெளளமலேயுறபபொழிநதயினனா
வேளவியைநெறியிறசெயதவேதியாநமமையூழாற
சூழ்வினைமாயநதெனனவகனறனதோறறமினறி. (ஙக)

ரிகளுமின்றிமேகமொருவிடதூயவானம
வெளிபுறவிரவிதோனறிவிளங்கிடவாயாமாத
ரளவிலாமகிழசசியெயதியாவொடுகமலக்கணறைக
களவினெயயுணடானவைததககயிறுறநிறகுநகாலே. (ஙஉ)

கெருடகாந்தருவாசிததாவித்தியாதராகளகீத
வரிவையரியககரொபமிலகினனாரளபமிலாதோா
தெரிமலர்சொரிந்துதேவதுநதுமிமுழஙகியாடிப
புருடவுத்தமனேயென்றுபோற்றிசெய்தாாகளன்றே. (ஙங)

பருவமோரேழுதன்னினேழுநாள்பருப்பதத்தை
[illegible]யினேந்திநின்றவொருவனையுணராதேயான்
[illegible]றுச்சிநதைகலங்கினேனென்றுதேவ
ரா[illegible]னிவரோடும்வலாரிவநதறையலுற்றன். (ஙச)

கோவர்த்தனகிரிப்படலம்.

மாரியைமேனைத்தடாமலேழுநாள்வரையையேந்து
மாரியுனீயேயென்பதறிகிலேனண்டம்பூ
வேரியங்கமலத்தோன்றன்றாதையேவினையேனந்தோ
பாரிடைநந்தகோபன்பாலனென்றெண்ணினேனால். (௩௫)

காமனாயிரங்கண்ணனலேகாமவேடன்னைத்தந்த
வாமனனெழிலைநோக்கியிறைஞ்சியேமண்ணினின்று
பூமனேருலகுதந்தபுனிதனேநூற்றுபத்து
நாமனேயடியேன்செய்தாவையினைப்பொறுத்தியென்றான். (௩௬)

பிற்குணத்தினர்கடம்மையீசனுமென்றும்பேசித
தற்குணமகற்றுவாயநீசுருதிநீசோதிநீயே
சிறகுணமாயநீயேதீக்குணமிரண்டுநீக்கி
முற்குணமாயநீயேமூவுருவாயதேவ. (௩௭)

எனவினைநீவிபவந்தன்னுளிருத்தியையதுதன்னாலே
யுனையானறிந்தேனில்லையம்பரினெழில்யுண்மின்
மின்னியேமறைந்தாற்போலவெளிசெயமைமறைபபமீள
வுன்னரிதாகுநுசோதியெள்ளப்போலுலவினிற்பாட. (௩௮)

ஆதலினடியேன்செய்தபிழைதபொறுத்தருடியென்ன
மாதவனிருபாதத்தனவனாகியேவலாயிற்றன்ன
நீதசலகாமதேனுவந்தடிவணங்கித்தவா
போதயன்பணியால்வந்தேனபுனிதனசேடியென்ற. (௩௯)

மலரயன்மொழிவானெந்தைமணமிசைநின்றனீயுன
முலையுறுபாலினாலேமஞ்சனமாட்டிமூவா
நிலையுடையானுககோத்தநாமநீந்கழுதத்கெனரு
னலையுறுபயோததிக்குளமர்செல்வவெனறதேனு. (௪0)

நவமணிக்கொம்பிலவாலிறனுளிலிறகமுத்தினண்ண
வுவமையின்மேனியோங்கவுவந்துதனமுலைப்பாலாலே
புவியினினனகனனபுயலைமஞ்சனநீராட்டித
தவர்மறையறையப்பேரிதுநதுமிதழங்கிற்றமமா. (௪௧)

தேனுவின்முலைப்பாலாலேசிறந்திடுவானைநோக்கி
யானையிற்றிலதமாகியமராபதந்தான்
வானதிநீராப்பொன்னாமணிக்கும்பக்கலசத்தேற்று
மானவன்மேனியெல்லாமஞ்சனமாட்டிற்றன்றே. (௪௨)

ஆவினுக்கெல்லாமேலாமழகியகாமதேனு
பூவினிற்றொடைபொன்னுடைபுதுமணியிழைகள்சாத்திக்
கோவினைக்காத்ததாலேகோவிந்தநாமந்தன்னை
நாவினால்நவின்றுபட்டங்கட்டியசலன்கள்மேவ. (௪௩)

பேரிமாமுரசுசங்கஞ்சச்சரிபிரளையத்தி
ரூரவாரங்களொன்னவறைந்திடவுயர்ந்ததேவர்
சொரிதாமலர்களேவத்தேனுவும்வலாரிதானும்
பாரினில்வணங்கியேகபரமனுங்கிலங்கினின்றான். (௪௪)

ஆயர்கோனசோதைமங்கையுரோகணிராமவண்ணல்
மாயனைத்தழுவிக்கொண்டுமகிழ்ந்தனர்மாதரோடும்
நேயமாமபொதுவரெல்லாந்துதித்தனர்நிரைகளோடுந்
தூயமாபதியிற்புக்கித்தலங்கிடாண்டமருநாளின். (௪௫)

கோவர்த்தனகிரிப்படலமுற்றிற்று.

ஆ-திருவிருத்தம் - ௩௰௬௩

---

௪௧. வது—வருணப்படலம்.

மந்தரவரையின்வெய்யவாசுகிதன்னைவீக்கிச்
சிந்துவைக்கடைந்துதூயவமுதினைத்தேவர்க்கெல்லா
மிந்துவினுதலியாயவரிவையாய்ப்பகுந்தாண்டியந்த
செந்திருமருணனபாதந்தொழுமினைசெயவினைகமா. (௧)

ஏருறுமிரவிதோன்றிற்புறுவாரேசியிலலையென்றே
பாரணைமுந்திச்செய்வானபருதிதேதொழுவமுன்னே
நீரினிறபடியலோடுமங்கரிலாவருணன்றூதா
சீருறுநந்தனைறன்னைப்பறறித்தம்முலகிற்சேர்ந்தார். (௨)

நதியினீரதனின்மூழ்கும்நந்தனைத்தேடிக்காணார்
பதியினிறபுகுந்தேயுற்றதுறைசெய்வாபசரகக்கேட்டு
விதிகொடிதாரோதோவெனாவிழுந்தழுந்தசோதைமேம்மிந்
ததிகளவாடுவானைத்தழுவிநின்றாற்றிலாளால். (௩)

மைந்தவுன்றனைதபோனவாழ்விலேனுயிரைமாய்ப்பே
னெந்தைநீதனிபறறென்றென்றேயிரங்குவாளோ
டுந்தியின்மலரோனறன்னையுதவினோளழுதுதேறித்
தந்தையைத்தருகின்றேன்யானறவிர்துயரொன்றுசொன்னான். (௪)

சங்கொடுசக்கரம்வாட்டண்டொடுசார்ங்கந்தோனறச்
செங்கதிரொளியேயேலச்சிறந்திடுங்கிரீடந்தோனறப
பங்கயமலரலர்ந்துபடர்ந்திடக்கவின்கொண்டோங்கு
மங்குல்போலெய்தினின்றான்வருணன்மாயதியினமாதோ. (௫)

கண்டனன்வருணனீலமுகிலினிற்கமலம்பூத்துத்
தண்டுளவணிந்துவானின்சசியொடுமிரவிதோன்ற
மண்டினில்வந்ததென்னவயங்கியமாயோன்றன்னை
யெண்டவர்தொழும்பாதத்தினிறைஞ்சிநின்றேத்தினானால். (௬)

நளினமாமலரின்மீதினான்முகன்முதலோசியார்க்குங்
களைகணாயுலகமெல்லாங்கடந்துமீயிரசைமேற்பே
ரொளியுளேயுறையுஞ்சோதியொருவர்க்குமகப்படாதா
யெளியைபோலென்முனனிற்கவெத்தவஞ்செய்தேனென்றான். (எ)

சிந்தைசெய்துலகமெல்லாந்திருத்தியேயவற்றுக்கெல்லாந்
தந்தையாமெண்கணன்றன்றந்தைநீயுன்னைப்பெற்ற
நந்தனுந்தந்தைதன்னைநந்தியினென்றாதர்ந்தா
ரெந்தைநீபொறுத்தியென்றேயிருபதத்திறைஞ்சினானால். (அ)

பன்மணிவருக்கத்தோடும்பாசிழையெண்பட்டாடை
நன்மதிசேர்ந்தசங்குந்தரித்தநாரணன்முனைவந்து
மன்மதற்றந்தாயுன்றன்றந்தையோடெய்திவாழ்தி
யென்மதிமறவாதுன்னருளொடுவரஞ்செயவென்றான். (கூ)

சிந்துவுக்கிறைவனீய்ந்தசெழுமணியிழைகளாடை
யிந்துவைநிகாதசங்கமேந்திமுனவாகுகொண்டே
நந்தனுந்தானுமெய்திநன்மனைபுகயசோதை
சிந்தையினுவந்துவந்துசிறுவனைத்தழுவிக்கொண்டாள். (க0)

நந்தன்றன்மனைவிதன்னைநேட்டமோடொருவாழுக்ச்
சிந்துவுக்கிறைமுன்றன்னோடாட்வாசேர்ந்தவாறு
மைந்தனுங்கணையனையதிமாருவானவாறு
முந்திவந்திறைஞ்சிநின்றமாரிந்தமன்மொழிந்தவாறும். (கக)

மற்றவனுற்றதெல்லாமுரைத்தவளைமைந்தனென்று
பெற்றனம்யாமேயென்றமுமாட்டிப்பேரிமுக்கமன்றி
நற்றவக்கற்கல்முன்னானநிகனறனவிவனையண்ட
முற்றுமானவனுமென்றுமொழிந்துமிற்சொல்லுக்சேற்க. (கஉ)

விடமுலைப்பாலையீந்தவெய்யவலகையினையுண்டுங்
கொடியவச்சகடுதைத்துங்காலயாசுரனைக்கொன்றுங்
கடியவெங்கன்றெறிந்துங்கசத்துணவாடபிளந்தும்பாரி
னெடியதாய்க்கிடாதபாம்பினெஞ்சிலைப்பிளந்துநின்றான். (கங)

காளியன்பணங்கடோறுங்காலினான்மிதித்துக்காட்டி
கீழுமால்வரையைக்கையினேந்தியிந்நிலத்தின்மீது
ளுள்களோரேழுநின்றுநாமெலிந்திடாதவண்ணங்
சாளமாமேகம்பெய்யுங்கல்வருடத்தைக்காத்தான். (கச)

ஆதலாலிவனையீன்றவன்னைநீயத்தனுனென்
றோதுபேதைமையையோவியொளிர்திறச்சோதியோன்றன்
பாதமேற்பணிந்துயர்ந்தபதந்தனிலடைவோமென்றே
மாதவன்மலர்ப்பாதத்தின்வணங்கிநின்றிவைகள்சொன்னார். (கரு)

அந்தமுமாதிதானுமளப்பரிதாயவுன்னை
மைந்தனென்றெண்ணியாங்கள்மதிமயக்குற்றேமாகி
லெந்தைநீயுயர்ந்தவீடுண்டெமக்கருளென்றேயெந்து
தந்தைதாய்நயனங்காணத்தன்னுருவாகிநின்றான். (௧௬)

நீலமாமேனிகண்டார்நேமியுஞ்சங்குங்கண்டார்
நாலுகைவனப்பைக்கண்டார்நலந்திகழ்கிரீடங்கண்டார்
சீலமாந்திருவைமார்பிற்சிறந்திடக்கண்டார்பொன்னின்
கோலமாராடைகண்டார்குனிவில்வாள்கதைகைக்கண்டார். (௧௭)

துளவணிமார்பினாரந்துலங்கியவெழிலைக்கண்டார்
துளவலார்நகையைக்கண்டார்தாள்களினெழிலைக்கண்டார்
களவினில்வெண்ணெயுண்டபவளவாய்ச்சகவிணைக்கண்டா
ரளவிலாக்கருணைநல்குமழகியநயனங்கண்டார். (௧௮)

குண்டலங்கதிர்களோலக்குழையிற்றுலாவக்கண்டார்
மண்டலவதனங்கண்டார்வளைவில்லன்புருவங்கண்டா
ரண்டமுண்டானமேனியழகுகண்டமாதானனை
யுண்டவாபோன்றுகண்ணீர்ப்புனல்கொள்வனாசகளுற்றார். (௧௯)

உயர்மறைக்கப்பட்டாயையுரலினிற்கட்டினோமியா
மியல்பினேமுலகுண்டாயைமண்டினாயென்றுசொன்னோஞ்
செயலெலாமுடையவுன்னைவெண்ணெயுண்டிருடனென்றேம
படமிலாமாயவுன்னைப்பயப்படென்றடித்தோமென்றார். (௨௰)

எந்தையுமநீயேயாகுமெமக்குநீமகவுமாகு
யந்தமுநடுவுமாகுமாதியுநீயேயாகும்
செந்திருநீயேயாகுஞ்சிறந்தவர்கணவனாகு
யுந்தியின்மலரோனுக்குப்புருடகிரமசதியானுட. (௨௧)

என்றவர்துதித்திறைஞ்சவெமக்கருள்கதியையென்ன
வன்றுலகுண்டசோதியளிப்பிறைவனாநோக்கி
யொன்றியதவத்திரட்டிச்சுகங்களிலுயர்ந்தோனன்றே
வென்றுமீறிலாதவீட்டையீடகுவனபின்னைசொன்றான். (௨௨)

ஆயவையெல்லாங்கூறியாதியாமுருவைநீத்து
மாயையாலவர்கடன்னைமயக்கியேமைந்தனாகித்
தூயவர்முனினின்றானைச்சோதியென்றறிகிலாராய்ச்
சேயெனவெடுத்தணைத்துச்சிறந்தினிதிருந்தாரம்மா. (௨௩)

வருணப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௦௮௬.

அரியுழையுழுவைநாகமரவொடுபறவையாவி
னிரையுடனினிதுகேட்பநிறைமரமதுக்கள்வீழ்ப்பச்
சுரர்மடவார்களையத்துலங்கியதொறுவமாத
ருருகவேயூதினின்றேன்புகழினையுரைத்துய்வோம்யாம். (க)

இந்திரையிலங்குமாயர்பதிதனிலெழில்கொளாயர்
சிந்தையின்மகிழவாவினிரைகளுஞ்சிறந்துதோன்ற
நந்தனுமசோதைதானுநலஞ்செறியழகுகொண்ட
மைந்தனோடினிதிருந்தார்வந்ததுவசந்தகாலம். (உ)

தூயமாவசந்தகாலந்தோன்றிடத்துணைவரின்றி
யாயர்தம்பதியையோவியஞ்சனக்கொழுந்துபோல
வேயிசைவாயினூதியின்னவர்மகிழ்ந்துபோற்ற
மாயவன்யமுனையாற்றின்வளமையைக்கண்டான்மன்னோ. (௩)

அலையொலிகறங்கவீசியோடியயமுனாநதி
னிலகியவானையாயவெழிற்கயல்செல்கடினள
நலனுறுவரால்கடாவநந்தினம்பரந்துமேய
நிலமிசைவயங்குமந்தாகினிதனைநிகர்த்ததமாதோ. (௪)

வேறு. மதுநுகர்ந்துழுந்திமயங்குதுறைதிரிநர்மகிபலவெள்ளனைப்பனபோ
லுதகியினலரியெழுபொழுதுவெள்ளியயரிழுரன்றிடமுன்னுட்
கதிர்மறைபொழுதிற்குவிமலர்களினக்கள்ளுண்டமளியகிறெவிசெட்
டிதழுறமலர்வாய்குடைந்தெழுந்தனவாவியல்பர்சொல்மருதவொனவே.

கங்குலிற்பரத்தைகலவியினழுந்திக்கதிரவன்வரப்பொதுவியரா
மங்கைதன்னிடத்திற்செலவவள்சினத்தாண்டடைத்தவாசலினமர்பவன்போ
றிங்கள்சாலிருளிற்குவிமலர்களினத்தேனுகரியிரவொருவத் [ற்
தங்குமம்மலர்விட்டகன்றலர்குவிந்தகுமுதத்திற்சார்ந்தவளிருந்த. (௬)

செங்கமலத்தொண்பொகுட்டினிற்றிலங்கள்சிதறிடவுமிழ்ந்திடும்பனில
மங்குறுத்திடவீழ்நறவம்வெண்மணிளினத்தூன்றிடவதனனப்பெடை
பொங்கியமதுவாலகன்றதன்றுளாற்பொருந்தியவாறவநீத
மங்கியினுருக்கிவிழவெள்ளிவள்ளத்தேற்றிடுமரிவையைநிகர்த்தே. (௭)

விரியும்வானளினத்தமரனச்சேவல்விழுமியபெடையின்மீதேறிப்
பிரிவிலொண்கலவியினைத்தனபோன்றபீழையாற்பேட்டனமதுகண்
டெரியிடைவிழுந்ததெனவலருஞ்செங்கமலத்தினிருந்தனவரால்கள்
பரவியவ்வனலையவிப்பபோலதனிற்பயமுறவெழுந்துதாவியதால். (௮)

வாலொளிர்களினங்குரண்டமென்றஞ்சிவருலிபோய்வலையினையணுகிச்
சாலவும்வெருவியயத்தினுள்வைதான்சார்ந்ததென்றகன்றுகூம்யாமற்
பாலடைந்தவையும்பணியெனப்பயந்துயயமொழிந்தேதுள்ளிவானின் [ந்த.
மேலெழுந்தழலின்மிடைந்தவெள்ளியைப்போல் விரியுஞ்செங்கமலத்தின்வீழ்

வலமுழ்வாமமுமாங்ககன்றபங்கயமும்வாலுமுநளினமுமலர
வலர்தரும்பானலயத்ததிருப்பண்வளர்ந்தவ[illegible]சுகனலைப்ப
விலகியபக்கத்திருமலரினுந்தானியங்குவதிராகுபார்க்கரனைக்
கலைந்நிறைகுபேரனுடனுமோர்பக்கந்தனிற்கலந்ததுதனைக்கடுக்கும். (௧0)

கேடசங்கதிர்வாளயில்கணைபலவுங்கிளர்ந்தவனைதிருநுமவர்தங்
நீடியகதுப்புநயனமானனம்வாய்ங்கரிலிகாதறத்துணித்தே
ஓடுறுகம்டம்வாாலுகள்வாளையுலப்பில்சின்மீன்விசைத்தறைய
மூடுசைவாலங்குவளைசெங்கமலங்குமுதநாளிகமுறிந்திற்ற. (௧௧)

விதுநிறைகலையுற்றதனிடைக்களங்கமுறவுந்தான்விளங்கியதெனவே
மதுநுசராநுகால்வர்ந்தவெண்ணளினமலிந்திடவயங்கியயமுனை [ப்
யெதுகுலத்திறைவனெழிலிபோல்வடிவாமெழிலினையெண்ணில்கண்விழித்து
புதியசெங்கமலம்விளக்கதாயேந்திப்பொலனுறநோக்கியபோலும். (௧௨)

நகையுறவதனம்வயங்கவேயெழிலார்நயனங்கள்களிப்புறநோக்கி
பகிலுறுபனிநீர்கணவன்மெய்குளிர்ப்பவங்கையால்விடுமரிவையைப்போ
லிகழ்விலொண்பணிலமுமிழ்ந்தநித்திலஞ்சேர்கமலநீலோற்பலமிலங்க
மகிழ்மலர்நிறைந்ததிவலைமாலாகமணமுறவீசியயமுனை. (௧௩)

வயலுறுகளைவண்டடருநீர்க்கொடிதொடமர்ந்தலர்மலர்சடேமாமேற்
குயில்சுகம்நிறையத்தென்றறன்காலெங்குலாவவேயாவிமீன்குதிப்பச்
செயலுறுமிவைவேள்சிலையதிறுறுநாண்சிலீமுகம்காகளம்புரவி
யியல்புறுமிரதந்துவசமொத்திலங்கத்தரணிமானோநதியதன்றே. (௧௪)

பொங்களிசிலைநாணெனவிலங்கனங்கன்சரம்படாப்பெதும்பைபூவணையிற்
றங்கியொண்சொழுநன்கல்வியைவிழைக்கச்சார்கெனக்காந்தனிலிடைவாள்
செங்கையைவிசையாலவன்வலித்தெனவேசிகரமெறிநிரையமிழ்த்தும்
பங்கயமலரைத்தருணநல்விபந்தன்றுதிக்கையாற்பற்றியேயிசித்த. (௧௫)

ஊடியமடவாளதரந்தன்வாயாலுவப்பொடுபற்றவெங்கரத்தால்
மூடியவோட்டத்துடனுடன்படாதங்கலைபவடனைமுனிந்தெழுந்தே
சாடியதலைவனெனவயமிசையிற்றபனன்றன்சுடரினுல்முகிழ்த்த
வேடுடைக்குமுதந்தனையளிகுடைந்துநெறியிலாதெற்றியசிறகால். (௧௬)

திரைபெறுங்காத்தாலருக்கியமளித்துத்திவலையால்மஞ்சனமாட்டி
மணையிலையதனிற்சிதறுசீகரமொண்மரகதத்தாலமேற்றாள
நிரைகொளாலாத்தியேந்தினநளினந்தீபமாய்ங்கரில்வெண்கமலத்
தரியிசைபாடவனமசைந்தாடவரியையாராதனைசெய்த. (௧௭)

வேறு. நாகமாமலகங்குருந்தம்நாவல்மாதவிநரந்தை
பூசமாம்பிரம்வருக்கைகேசரமகிழ்பொற்கொன்றை
மாகமார்கோவிதாரங்குரவகம்வழைமந்தார
மேகமாராரந்தாழைபாடலம்விளங்குமன்றே. (௧௮)

கோகிலங்கூவக்குஞ்சோடஞ்சுகங்கொஞ்சவாடும்
கேகயக்கிளரவண்டுகின்னரர்போன்றுபாடப்
பூகமேல்மிழற்றும்பூவைபொலிந்திடக்கபோதமெல்லாம்
நாகமேற்றிகழயூகம்நன்மரந்தோறுந்தாவ. (௧௯)

இனையனவயங்குகின்றவெழில்விருந்தாவனத்தின்
மனமகிழ்ந்தினிதினோக்கிமணிவண்ணனுறையும்வேலை
தினகரன்குடபாலெய்திமறைதலுந்தீரவொண்ணா
வினையெனக்கங்குலெய்திவிளைந்தன்முலகமெங்கும். (௨0)

வேறு. தலைவன்விட்டகலவிடருறுமவள்போற்றபனன்போய்மறைந்திடநளி
மலர்குவிந்திடத்தற்பிரிந்தநாயகன்முன்வரமகிழ்மங்கையொனவே [ன
கலைநிறைமதிகண்டலர்ந்தனகுமுதமவையினைக்கண்டநற்சேவல்
பொலனுறுபெடையின்றுயர்நினைந்தவைதானலனுறப்பொதும்பிற்புக்களைத்த

வேறு. இடரொரீஇமடவாருணியிதழ்க்கதவடைக்கவாரஞ்
சுடருறவணிந்துதூயமுகந்துலங்கிடத்தன்கேள்வன்
வடிவுவந்தணைத்தமின்போல்வயங்குஞ்செங்கமலம்கூம்ப
வுடுமதியிலங்கக்கொண்மூவுருவெனவளைத்தகங்குல். (௨௨)

உயர்தனிச்செங்கோலோச்சியுலகினையாண்டமன்னன்
பெயரவங்கற்றம்பார்த்துத்தீயவர்சூழப்பின்னோர்
தனையுடையரசனெய்தியவர்களைத்தள்ளிமேவுஞ்
செயலெனவிருளைநீக்கிச்சிறந்ததுகீழ்பாற்றிங்கள். (௨௩)

வியாளமேற்றுயிலைநீங்கிவெய்யவருடனேபாரிற்
சுயோதனன்மடிந்துவீழக்குந்திதன்சுதர்மேல்வைத்த
தயாவினால்மாயனெய்தித்தரணியிற்பிறந்தானென்றே
பயோததியரந்துதேடும்பண்பெனநிலவுகாய்ந்த. (௨௪)

நிசியெலாமகலவானில்நிறைந்தெழுமமிர்தம்போன்ற
சசிநிலவெறிப்பவாவித்தண்மலர்வெறிகஞறத்
திசையெலாமிலங்கத்தென்கால்பையவேசிறந்தாண்டெய்த
வசையும்வண்பொழிற்கோட்டினலர்மலர்வாசம்வீச. (௨௫)

பொன்மலைவில்லியெண்கண்புனிதன்புத்தேளிர்நாத
னன்மதிமுனிவர்தூயநாகர்கள்சூழ்ந்துபோற்றத்
தன்மயமானவண்டமடங்கலுந்தானேயுண்டான்
மன்மதனணைநின்றான்மண்மகள்மகிழமாதோ. (௨௬)

வேறு. பரிபுரங்கள்பாதமிசைக்கதிரைக்காட்டப்பசும்பொன்னரிஞுடையுடை
திகழத்துய்ய, தரளவடமொடுதாமந்திவளக்காதிறறயங்கியகுண்டலமலையப்
பீலிப்பின்னல், சிரமிசையிற்கவினுறவேகேயூரங்கடிரண்டுயர்ந்தபுயமிசையி
னெழிலைக்காட்டக், கரமிசையின்வயிரமணிக்கடகமின்னக்கந்தற்பனெனக்க
ழைகொடுதிருனல். (௨௭)

கரும்புருவம்நெறித்தெழில்சேர்கடைக்கண்ணேக்கிக்கண்ணபிரானூது குழற்கானங்கேட்டே, யரம்பையுருப்பசியொடுமேனகையிலங்குமழகுசெறிலோர்த்தமையோடனேகமாதர், கரும்பிரதமொழியினர்கள்வளைகள்சோரக்கலைநெகிழக்குழலவிழக்கடிதினெய்தி, விரும்புறவேநோக்கியுலைமீதுவைத்த மெழுகெனவேமெய்மறந்தங்குருகிநின்ருர். (௨௮)

இருகரங்களிலங்கமழையெழில்போன்ற விறையூதுங்குழலமிர்தகீதங் கேட்டே, கெருடகாந்தருவருயரியக்கர்சேழில் கின்னரர்கிம்புருடரெழின்மிக்கதூய, வுருவுடையதும்புருநாரதர்கள்சித்தவித்தியாதரர்களும்வந்தெய்திக் கையின், மருவியகின்னரியிணையில்வீணைசோர மதிமயங்கிச்சித்திரம்போல் நின்ருர்மாதோ. (௨௯)

வடிவுடையமதனனெனவயங்குகண்ணன்வாயினூறுவேயினிசைசெவியின்வாய்ப்ப, அடவிதனிலழல்வளர்த்துவருந்திச்செய்யுமருந்தவங்களொருவியோகிகளுமொக்கக்,கடலிறுறமமிர்தமகவனியிதெல்லாங்கைத்திடவானமரர்களுங்கடிதினெய்தி, யுடலுருகியானந்தவாரிசோரவுறநோக்கிமெய்மறந்தோவியம்போல்நின்ருர். (௩௦)

கோகிலங்கள்கிளிமுசங்கள்கபோதம்பூவைகொஞ்சுசகமோதிமநீள்குரண்டம்நாரை, போகமிருமன்றில்புதாயினங்கள்பாப்போடசுணைப்புள்ளினைகளெல்லாங்கடிதிற்புக்கே, யோகையுடன்சிறகுருவித்துற்றுநோக்கியுருகியிருகண்ணிமையாதிருந்ததூய, நாகமிசைநடித்தருள்வோன்வேயினூது நாதவிசையிருசெவியோர்ப்புற்றுகைந்த. (௩௧)

கருமுகிலஞ்சனநீலங்காயாம்பூவின்கவினிகராமுருவுடையகண்ணன்வாயின் மருவுகுழலூதவெழுநாதகீதமதோதயினமிர்தெனவேசெவியினவாய்ப்ப வரியநறுமலரினூறுவேரிதன்னையருந்துதல்விட்டெய்தியளியாடாதாடா [ ]ற. திருசிறகுவிரித்துயர்வானசையாதேகாதெழுதியசித்திரம்போலவிருந்ததன்

நாகரிகனுணவள்ளலூதுகின்றநற்குழலினெழுநாதகீதங்கேட்ட, ஞகரம் பஞ்சானனஞ்சார்த்தூலங்கைமாத்துலங்கியவாலிகமயிடமெண்குநீறி, மோகரத்தினெய்தாளிகுருளையோடுமூடுதசினமொழிந்துகண்களிமையாதாகிச்,சாகரமாய்ச்செவிநெறித்தேயுருகிநிற்பச்சற்பங்கள்படம்விரித்தாடாமனின்ற.

காதினிற்குண்டலமிலங்கநெற்றிமீதிற்கஸ்தூரித்திலகவொளிகவினேக்காட்டச், சீதரன்றன்வாயினிசையெழுநாணச்சிறந்தகுழலூதவெழுநாதந்தன்ணுற் பாதவங்கள்மதுச்சொரியமலர்கள்வீழப் பரந்துகனியுதிர்ந்திடவேபணிவார் போலப், பூதலத்திற்பரமனின்றதிசையைநோக்கிப்பொலிந்தநமாலச்சாகை வளைந்தமாதோ. (௩௪)

கானிலெழுநிலவெறிப்பத்தண்கால்வீசக்காவினுறுமலர்வாசங்கமழக்கேழி, ஞானவெறியுறுமேனிதிகழுநின்றநாரணனூதும்வேயினாதங்கெட்ட, மானினங்கள்மேய்ந்தபுல்லுங்கடைவாய்சோரமகிழ்ந்திருகண்ணாலனையப்பார்த்துநிறக, வானிரைகள்செவிநெறித்துமுலைப்பால்சோரவகங்குழைந்துகன்றினுடனுருக்கிற்றம்மா. (௰௫)

மாயவன்றன்வாயினிடைவேயைவைத் துமகிழ்ந்திசையினூத வெழுகீதங்கேட்ட, வாயர்மடவார்களெல்லாமுருகிநெஞ்ச மாவிதளர்ந்தேயொன்றுமறியாராகி, யேயெனுமுன்குழலோசைநெறியினெய்தியிடைதுவளக்கலைநெகிழவளைகள்சோரத், தூயகுழலவிழவிமைப்போதின்முன்னந்துலங்குபரமன்றனைத்தான்சூழ்ந்தாரன்றே. (௰௬)

கறந்தநிறைபாற்கலசநடுத்தரையின்வையார்கவிழ்ந்தநடையவெறிந்தோடிச்சடிதிற்சென்றார், சிறந்தவனமருந்துகரதீர்க்காட்டார்திபெங்கிமனக்குடுமாறவினைவிற்சேர்ந்தார், நறக்குதுயிலனைந்தவுடைபாறினார்கள்சோரருவற்கிடுவமுன்னேனுளங்கிற்றம்மே, மறந்துமதிமயங்கியல்லையேகினார்கள்மாலைமூவார்தமைத்தடுக்கவல்லாரியாரே. (௰௭)

வேறு. பெருகியவன்பின்மாதர்பிறங்கிருங்கூந்தருழ
வுருகியமனத்தராகியோடும்போதொருத்திதன்னைக்
கருகியசினத்தனாகியவளன்னைகடிதினெய்தி
யிருகரம்பிடித்தலொடுமெய்தமாறியாளாகி. (௰௮)

நந்தன்றன்மைந்தன்பாதநலன்கழனினைந்துநைந்த
சிந்தையளுடலின்றுசியரியடிசேரவேதி
வெந்தரச்சமார்பூவின்மாரிகள்பொழியவான்ற
சுந்தரவிமானமேறித்துலங்கியகதியிற்புக்காள். (௰௯)

செந்தழல்வளர்த்தெண்ணிலாவருந்தவஞ்செய்தோராலுங்
கந்தமாமலரோனாலுங்காண்கிலாச்சோதிபாதஞ்
சிந்தனைசெய்யச்சிந்தைதீர்ந்தையந்தியளாய்ச்சீரா
யுந்துநற்கதியைச்சேர்ந்தாளவனல்லாரோடிச்சென்றார். (௨௰)

வேறு. காலிலணிநூபுரத்தைக்கையிற்பூட்டிக் கரத்திலுறுமணிக்கடகந்தாளிலிட்டார், நூலிடையின்மேகலையைக்கழுத்திற்சாத்திநுண்டுளையினூவடமருங்கிற்சேர்த்தார், கோலமுறுபொன்னுடைதலையிற்சூட்டிச்சுழலிலணிதொடைகளெல்லாமரையிற்சூழ்ந்தார், மாலுறவேயின்னதென்றுமறியாதோடிமணிவண்ணன்மேனிகண்டுமயங்கினாரால். (௨௧)

அலர்ந்தெழுந்ததாமரையின்மதுவையுண்ணவவாவுடனேயளியினங்களடைவபோல, நலந்திகழுந்திருமேனியையன்கைகால்நயனமுகம்வாய்மார்பில்நாட்டம்வைத்தே, தலந்திகழும்பிரசமுறுமீய்கள்போலத்தளர்ந்தனர்கள்பொன்னுடைதறையின்வீழ, வுலர்ந்தயர்மின்னார்களிருகைகள்கூப்பி யுத்தமனெம்மயல்தீரொன்றுரைக்கலுற்றார். (௨௨)

புன்முறுவலாலாவிதளர்ந்தோநின்றன்புருவநெறிப்பால்மயலைப்போத
ப்பெற்றோம், நின்மலநின்கடைக்கண்ணினோக்கினாலேங்கலையழிந்தோமெம்மு
யிர்கள்நிற்கும்வண்ணா, முன்மணிமார்பழுந்தவெம்மையணைத் தியென்றேயுணர
த்திடவேயோரொருத்திக்கொருத்தனென்ன, மன்மதனாகியவுருவமனேகமா
கிமாதர்கடந்தோளணைந்தான்மாயன்மாதோ. (௪௩)

இருளளகமவிழமலர்கமழவேர்வினெழில்வதனமுத்தரும்பவிருகைமீதிற்
சரிவளைகளொலித்திடநன்மணியால்மின்னுஞ் சதங்கையவிர்பரிபுரங்கடாளி
னார்ப்ப,வரையெனவேகதித் ததனத்தங்கராசம்வாசமுறுகுங்குமமுமுதிரவை
வேல், பொருகயல்களெனுநயனம்பூசலாடப் போர்மதனனாணவணைத்தருளி
னானால். (௪௪)

உருவுடையவுருப்பசிமேனகையரம்பை யொப்பிலாராயர்தங்கள்மடவா
ராகித், தரையிடையிற்பிறந்திலம்யாமென்றுநைந்துதளர்ந்துமதனேவுமலர்ச்
சாயகத்தால், விரகமுறவாடினர்கள்பொதுவர்மாதர் விளங்கினர்கள்கலவியு
றுமதனால்மிக்குப், பெருமையுறுமானந்தவாங்காரங்கள்பெருகிடலுமறைந்த
னனாற்பிரமன்றாதை. (௪௫)

மறைந்ததனங்கண்டுபின்னுமிழந்தார்போல மதிமயங்கிவாய்வெருவிவா
டினார்கள், நிறைந்தபொழில்வனமடங்கத் தேடினார்கள்நிலமிசையிற்காண்கி
லராய்நெடிதுநேர, மிறந்தவர்போற்சோர்ந்தனர்களெழுந்தார்மீள விறைவ
வெம்மையிகழ்ந்தனையோவகன்றாயென்றே, யறைந்தனர்சனாலியிருதனத்தி
ன்வீழவரிவையர்களெல்லாருமயர்ந்துசொல்வார். (௪௬)

சரிகுழன்மேல்மலர்த்தெரியல்சூட்டினாயே துணைமுலைமேற்றொய்யிறனை
யெழுதினாயே, தரளவடமார்பழுந்தத்தழுவினாயே சரியிலாவாயமிர்தின்சு
வைதந்தாயே, பிரிகிலேனுனையென்றுபேசினாயேபிறிதில்லையுனக்குநிகராமொ
ன்றாயே, யிரவிடையிற்றனித்தெமைவிட் டேகினாயே யென்றுசொல்லுமாதர்
பின்னரிவைசெய்தாரால். (௪௭)

இளமையுறுமொருத் தியுயரரிபோல்நின்றேயிலங்குமயிற்பீலிசிரந்திகழ
வாயின், துளைகளுறுவேயினிசையூதக்கேட் டதோகையர்களிருமருங்குமுன்
னுஞ்சூழ்ந்து, 'விளையுமயறீரவெம்மையணைத்தியென்றும் வித்துருமவாயமுத
மளித்தியென்றும், வளைகடிகழ்கரமுறத்தானறழுவிமாயனல்லனிவள்மங்கை
யெனமயங்கிச்சொல்வார். (௪௮)

அதுறைத்துவருவதற்குச்செல்வாரில்லை தோகையரையேவிவிடிலெமக
குமுன்ன, மாதரவாயவனெழிலைக்கண்டபோதங்கணைத்திடுவர்மீள்வதில்லைய
துவுமன்றிச், சீதனுமூராகியமதியுந்தென்றருனுந்தீ யெனவேவீசியிடச்செய்வ
காணேன், மாத[illegible]த்திறப்புமறைந்தவனும்வாரானென்றுமயங்கியிடமாமாயனி
வைசெய்தா[illegible]. (௪௯)

மானவனுங்கொருத்தியுடனெய்தியுன்மேல்மயல்மிகுத்தேனென்றுமலர்
பறித்துச்சூட்டிக், கானினடந்தேகால்கள்நொந்ததென்றுகழறுமவடனைச்சும
ந்துகடிதினேக, மீனைநகுவிழிக்கவின்கொளெனக்குநேராமெல்லியர்களில்லை
யென்றேயாங்காரந்தா, னவளைவிட்டொருவவளுஞ்சோர்ந்தாளரிதனைத்
தாமாய்ச்சியர்கடேடினரால். (௫0)

மடந்தையர்கள்வனங்களெங்குந்திருவியோடி வாடிமனம்வருந்துமவர்
வண்மையாகிப், படர்ந்தகொடியங்குசம்பங்கயமிலங்கும் பரமன்றாட்குறிக
ண்டார்பணிந்துசென்று, தொடர்ந்திடலும்பசும்புல்லாற்றோன்றுதாகத்துள
ங்கிமிகச்சோர்ந்தவர்களெழுந்துசண்ண, னடந்திடவேவசுதைமின்னினுரோ
மமாகிநலந்திகழப்பொடித்தனவேயாவென்றுநைந்தார். (௫௧)

அடியெடுத்துத்தொடருமடவார்கள்மற்றோராயிழையாணடந்தேகுமடி
யைக்கண்டே, யுடல்கனன்றிங்கெம்மையெல்லாமொருவிக்கண்ணனொருத்
தியைக்கொண்டேகினனென்றுரைத்துப்பின்னர், கொடியிடையாளடிச்சுவ
டுகாணார்மாயன் கோலமலர்த்தாளழுந்துங்குறியைக்கண்டு, வடிவுடையான்
மற்றவளைச்சுமந்துசென்றானெனத்தம்மனமுருகிவாடினரால். (௫௨)

தோகையர்கள்நம்மையெல்லாநீத்துக் கண்ணன்றுடியிடையாளொருத்
திதனைச்சுமந்துபாரி, னேகினனாலென்றிரங்கியடியின்பின்னெய்துமவரிளங்
கொடிக்கங்கிறைவனன்பால, நாகமலர்செறிந்திருண்டகுழன்மேற்சூட்டிநலந்
திகழவிருந்தபள்ளியறிந்துநைந்தே, யாகமெலிந்திவளென்ன தவஞ்செய்தா
ளென்றறையுமவரழுதரற்றுமவளைக்கண்டார். (௫௩)

என்னேயிங்குடறளர்ந்தேயிரங்குமாறென் றிளங்கொடியாருரைத்திட
லுமியம்புவாளாற், றன்னேரிலாதவரியென்னோடெய்தித் தையனல்லாயுன்ம
யலிற்றளர்ந்தேனென்றும், புன்னாகமலர்பறித்தென்குழன்மேற்சூட்டிப்புயல
முகனெனைச்சுமந்துசென்றுகானி, னென்னாகமெலிந்திடத்தானகன்றுபோனா
னென்செய்கேன்றோழியர்காளென்றுநைந்தாள். (௫௪)

அவளுடனுமாதரெல்லாமடியின்பின்னரடவியெல் லாந்திருவல்புரிந்தா
ண்டுங்காணார், தவளமணல்மலியமுனாநதியிற்சேர்ந்துதளர்ந்தவர்கள்கூடல்
வளைத்தாவிநைந்தே, தவளுமவர்முன்னீலமேகமென்னத் துலங்குமணித்தா
வடங்கள்மார்பிற்றோன்றப், பவளநிகர்வாயினிளமுறுவல்செய்துபரமபுருட
ன்றோன்றப்பணிசெய்தாரால். (௫௫)

பணிந்தெழுந்தமடவார்கள்சொங்கை மீதிற்பரிமளநற்சந்தனகஸ்தூரி
வாங்கி, யணிந்தனர்களச்சுதன்றன்மேனியெல்லாம வரவர்க்காண்டொருவ
னெனவனந்தம்பேராய், மணந்துதையமிளிர்மலர்கள்குழல்மேற்சூட்டிமணி
சூழ்ந்தமரகதம்போற்காவைச்சேர்ந்து, தணிந்திடநற்கலவிதனைத்தினமுஞ்
செய்தான்றனவற்றளகப்படாத்தலைவன்றானே. (௫௬)

வண்டமரும்பூங்குழலார்மகிழ்ந்துசுற்றமதனனெனவிலங்கியெழிற்கரத்திலேலே, செண்டுகொண்டுவிளையாடிக் குரவைகோத்துச்சிறந்தெழுந்த பொன்னூசலாடவாடி, யண்டரெல்லாந்திரண்டுமலர்பொழியவோங்குமந்தரதுந்துமிமுழங்கப்பவனிலமார்ப்ப, வெண்டவர்களானந்தவாரிசேரவேத்திடவேயினிதின்மகிழ்ந்திருந்தநாளின். (௫எ)

குழலூதுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௧௬௩.

௪௩. வது — அம்பிகாவனப்படலம்.

சீதராதிருவிக்கிரமாதிகழ், மாதவாமதுசூதனனேயுயர்
யாதவாவெனவேத்தடியார்கடம், பாததூளிதத்தாற்பவந்தீருமே. (௧)

இம்பர்மாவனத்தேவியல்பாயது, செம்பொனூர்மதிட்கூலஞ்சிறந்தது
நம்பர்வாழுறற்கோயிலிலங்கிய, அம்பிகாவனமென்பதோராலயம். (௨)

தரணிமேவுஞ்சரசுவதியென, வுரைசெய்யாறமர்ந்தாசினியொப்பது
கரையின்வாவிகள்பாய்ந்திடக்கற்பக, நிரைகனிகொடும்பொழில்சான்றது.

ஆசுவாசனனன்பினமர்ந்தது, தோகைமாமயிறசண்முகன்சூழ்ந்தது
மாகவானுறைமாநகர்போன்றது, நாசம்பூண்டொடித்தவன்வாழ்பதி. (௪)

சரதநான்மறையோர்தன்னிச்சார்ந்திட, விரதமாதவர்சூழ்ந்துவிளங்கவே
துரிதம்விழுத்துவசமுமேறிய, யிரதமோடுவிழாவுமமைந்தது. (௫)

ஆசைதோறுமவனியுளோரெலாங், காசுலாமுலைமாதர்களிற்றிட
வாசமாமலர்சூழ்பொழில்வானுறு, மீசன்வாழம்பிகாவனதெய்தினர். (௬)

அந்தநாட்டனிலாயர்கள்சூழ்ந்திட, நந்தகோபனகோதைநலங்கிளர் [தனர்.
மைந்தன்பால்வண்ணன்மாதர்களினடுறுஞ்,சிந்தையோடம்பிகாவனஞ்சேர்ந்

பம்பைபேரிபணவமுழங்கிடக், கொம்புகாகளங்கோடுமுழங்கிட
வும்பர்மாமலர்சிந்திடவோடிய, வம்பிகாவனத்தம்பிகைபாகன்றோ. (௮)

சித்தர்போற்றிடத்தேவர்களாடநற், பத்தரானந்தமாகிப்பரந்திட
வித்தகன்விடையேறியருளிய, சுத்தனன்பொழிற்கோயிறுலங்கினன். (௯)

கற்றைவார்சடையிற்கங்கைதோன்றிட, வொற்றைமான்மழுக்கையனுயரவே
பற்றலார்புரம்வெந்திடப்பார்த்தொளிர், வெற்றியாமிறைவீற்றிருந்தானரோ.

தூபமெங்குநிறைந்திடத்தூயதாங், தீபமாதர்களேந்திச்சிறந்திடச்
சாபமேவலாயாக்கியதாணுவைப், பாவம்வீயப்பணிந்தனராயரோ. (௧௧)

வாசமாமலர்மாலைநிறைந்திடத், தூசுமாமணமல்கச்சுகந்தமு
மீசன்மேனியிலங்கிடச்சாத்தியே, ஆசில்பூசனைசெய்தருச்சித்தனர். (௧௨)

இம்பராயர்கணந்தனோடெண்ணிலா, ரெம்பராவெனவேத்தியின்புற்றவர்
நம்பர்பாதம்பணிந்துநலனுறும், அம்பிகாமலர்த்தாளிலர்ச்சித்தனர். (௧௩)

பருதிமேற்றிசையுற்றிருள்பாய்ந்திட, வரிவைமாரண்டரன்னமருந்தியே
யிரவிடைத்துயில்போதெழில்நந்தனை, யரவுபற்றிவிழுங்கியதாமரோ. (௧௪)

வேறு. நள்ளிருளதனிலெய்திநந்தனைநாகம்பற்றி
முள்ளெயிறதனாற்கவ்விவிழுங்கலுமுறையோவென்னப்
பள்ளிகொள்ளாயரெல்லாம்பதைத்தெழுந்தனர்களோடிக்
கொள்ளிகொண்டரவைச்சூழ்ந்துசுட்டனர்குழாங்களாகி. (௧௫)

கதித்தவெங்கொள்ளிகொண்டுகடிதினிற்சுட்டபோது
பதைத்திலநந்தன்றன்னைவிட்டிலபகுவாய்வெந்திக்
கொதித்திடவிழுங்கும்பாம்பைக்குறுகிநற்கண்ணன்காலா
லுதைத்தலுமவனைவிட்டேயுரகமாமுருவைநீங்கி. (௧௬)

இலங்கியகிரீடந்தோன்றவெழில்மதனிவனாமென்னக்
கலன்களும்வயங்கப்பொன்னின்கலிங்கமுநடுவிற்சூழ்ந்து
துலங்கியேநின்றான்றன்னைச்சுந்தரனினிதுநோக்கி
நலன்கொளும்படிவினாய்நீயாரெனநவிலலுற்றான். (௧௭)

ஏசிலாமரபின்விஞ்சம்விச்சியாதரர்க்குளேயான்
மாசிலாநாமமேசுதரிசனனென்பேர்வானி
னாசையோரொட்டுந்தூயவிமானமேலமரவெய்தித்
தாசுநாண்மாலையாரந்துலங்கியான்றிரியுநாளின். (௧௮)

அருந்தவனங்கிராவென்றனையாங்கிரோனென்னும்
பெருந்தவத்தினனைப்பெண்மெய்க்கவினுறும்பெருமையாலே
யிருந்தவர்முனரினீயிர்குரூபனென்றெள்கல்கூறத்
திருந்தியமறைகொளுவர்சிகியெனச்சினத்தாரன்றே. (௧௯)

எம்மைநீகுரூபனென்றீண்டெள்குமுன்கொடுமையாலே
வெம்மைசேரரவமாகிமேதினிவீழ்வாயென்று
மும்மையாங்காலமெல்லாமுணர்ந்திடுமுனிவராய
செம்மையோர்சபிக்கவேயான்சிகியுமிழ்புயங்கமானேன். (௨௦)

தரணியிற்கருங்கல்லானுடன்னைமுன்னுருவமாக்குந்
திருவடிமெய்யைத்தீண்டலுற்றனன்வினைகள்தீர
அரவமாமுருவையோவியமரரிலுயர்ந்தேனைய
பரமனேபோற்றியென்றுவலஞ்செய்துபணிந்துபோனான். (௨௧)

ஆயவன்வணங்கித்தூயவிமானமீதெய்தலாலே
ஆயனாநந்தகோபன்சுதன்றனைத்தழீஇயின்புற்ற
னாயர்களெல்லாமீண்டுந்துயின்றனரவனிமீதிற்
பாயிருளொருவவும்பர்பணிமதியெழுந்ததன்றே. (௨௨)

தூயவான்மிசையினின்றுதூலங்கிடவிராமனோடு
மாயவனுருவமெய்திவாயின்வெயினின்றனாதி
ஆயர்கள்மாதரெல்லாமனைமந்நபோதனைகையின்கட்
டயனுஞ்சங்கசூடன்சேர்ந்தவன்கரந்துநின்றான். (௨௩)

சீலமிலசங்கசூடனென்றவன்றிருடனாகிக்
கோலமாமடந்தைமாரினொருத்தியைப்பற்றிக்கொண்டு
ஞாலமீதோடலோடுநன்றுதலாற்றக்கேட்டுச்
சாலம்வேருடனேவாங்கித்தாலகேதனனுஞ்சென்றான். (௨௪)

தாலகேதனன்மாச்சாலஞ்சுற்றியேசாதலசண்டாண்
டாலமேயனையசங்கசூடனுமவனோர்ந்து
காலினிலோடலோடுங்கருமுகிலவனைச்சென்று
சீலமேயிலானைகையானமோதவுஞ்சிதைந்துவீழ்ந்தான். (௨௫)

அவனுயாசிரத்திறந்தொன்றமாதவனவிரோயான்ற
நவமணிதனைவாங்கிரோணைமுன்னோனுக்கு
யுவகையினீய்ந்தபின்னரொள்ளியவெயையூதக
குவிமுலைமாதரோடுங்கடியேகளிக்கும்பொழுதினை. (௨௬)

செறியிருளொருவக்கீர்டபாறினகாரணமாக
வெறிகமழ்சோலைசூழ்ந்தவமபிகாவனமேவாத
நறுமலர்க்குழலினாருமநோதயரதன்றுமா
மிறைவனுமெழில்கிருஷ்ணாவனத்திடைபெயர்ந்தாரா. (௨௭)

ஆனுடன்சூழவருமாயர்களபதியிற்சென்று
தேனமர்பொழிலசோலையைக்கைச்சுற்றுத்துறைசடோறு
மீனிடையின்னலி [illegible] பொல்வேபுக
மானனையார்களொடுமாலைம [illegible] பும்தாயினர். (௨௮)

ஆமபிகாவனபபடலமுற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௩௧௭௧.

---

௪௪. வது நப்பின்னைப்படலம்.

கதலிபூகங்கமுகிளைசெந்நெல்சூழ்
மதில்பிறங்குமணிதிகழ்கோபுர
மிதிலையின்கண்விளங்கியகும்பகன்
புதல்விநாயகன்பொன்னடிபோற்றுவாம். (௧)

மாதவத்தினசோதைமுன்னோன்மனத
தீதகற்றியகும்பகன்சீர்மையான்
மேதினிக்குள்விளங்குமிதிலையா
மேதமற்றபதியினிருப்பவன். (௨)

இருந்துநான்மறையோர்மகிழ்செம்மையான்
பெருந்தவத்தினொண்ணும்பெருமையான
றெரிந்தஞானத்தன்செய்ததவத்தினுற
பொருந்துசெல்வத்தளைகைமன்போலுவான. (௩)

ஆயவன்செய்யரியதவத்தினால்
மாயவன்றிருமார்பினினவைகிய
நாயகிசகுங்கொளூன்றுத
றாயர்ப்பின்னையெனவவதொன்றினள். (௪)

வளையுமலிறசலைவன்னைடொடமைல[illegible]
நகிளைமபோற[illegible]கழநலவன[illegible]
குளையிலா[illegible]குகிரிடைசசோதக[illegible]
[illegible]வில்லைவமைடை [illegible]. (௫)

சழைகொடைளாத காதல[illegible]
ளமைழகொம மெல்லிடையாளெ[illegible]
மழைசொள[illegible]
[illegible]. (௬)

பேதைநீங்கியபெருமைபடை[illegible]
கோதைதனமகளாயுபார்மபகன
வேதுயா[illegible]
மாதவத்தினைவாழ்வன[illegible]. (௭)

காலரோ[illegible]யாசல[illegible]
ஞாலமாயவெருவா[illegible]
கோலமாயபுப[illegible]
வில[illegible]. (௮)

நடக்கிலெல்லைதிசைமுறநாநங்குமா[illegible]
படிக்கிறஞ்சடையனைவலவமைகமால
மடக்குவார்களைசசெறறமரங்கலை
யொடிகருங்கால்[illegible]துகெடுகிச்[illegible]மால். (௯)

இன்னதாயவிடபங்களேழையு
மன்னநனமிகுலைக்கரசாகிய
மன்னவன்வெருலாசுவன்வணைமயான
கொள்மினெனறுதனசேனைக்குககூறினன. (௧௦)

அரசன்கூறவடைநதவநீங்கினி
பரவியெங்கணுமபாசம்விட்டேயெறிந
திருகரததினுமாயுதமேநதிநீ
டரணியிறறிரிசேக்கைத்தாக்கினர். (௧௧)

வாலெடுத்தெதிர்வாய்கொடுசெறித்துக்
சாலெடுத்துத்துகைத்துக்கடித்தும
பாலெடுத்தவரைக்கொம்பிற்பாயவே
வேலெடுத்தகைவீரர்கள்மாண்டனர். (௧௨)

மாயும்வீரரைக்கண்டுமித்திலமன
றூபகும்பகன்றனனுடன்சொல்லுவான
பாயுமாவிடையேழையும்பற்றியே
நீயகற்றுதியென்றுநிகழ்த்தினன. (௧௩)

கொம்பினற்கொலைசெய்விடையேழையு
மம்பினவாளினடாந்தெறியாசத்தி
னிம்பரினவதைத்தாருகென்மங்கையைக
கும்பகன்றருவேனென்றுகூறினன. (௧௪)

நடையிறுதிமநாணநனனுலேயே
விடையளமெலம்பியறளனெழீறகாஙேய
கடுகியாணடடாநடாரகமவிகுசிய
விடையிறுறறறைவீழநதுமடிநதனா (௧௫)

சிந்தைநொந்தியங்கியகும்பக
னிந்தவெவ்விடையேழுஞ்செற்றிட
நந்தனலமந்சரோடமாணனுவாமென
மூந்துத்தனையலமுறகினன. (௧௬)

தூயகும்பகன்றூதர்கள்சொல்லினு
லாடர்சூழவருள்செறிநந்தனு
மாயனுமமதிவணணனுநனனெறி
சாயவிலாமிதுலாபுரிசார்ந்தனர். (௧௭)

தூதாநந்தனவரவினைச்சொல்லுந
தீதகற்றியகும்பகன்சென்றெதி
ராதரத்தினரத்தனேவோரையு
மேதமற்றதனிலலிறகொண்டேகினன. (௧௮)

ஆசிலாதவறுசுவையோதனம
நேசமோடளித்தேநிறைசந்தனம
பூசிநறபொனினுடைகள்போர்த்தன
வாசநாணமலாமாலைவழங்கினன. (௧௯)

ஏறுமாவரையேலவெழுந்தன
சீறியீண்டெதிர்ந்தாரைச்சிதைத்தமை
கூறிநொந்திடுகும்பகன்றனனொடு
மாறிலாநந்தன்மைந்தனியம்புவான. (௨௰)

கொடியவெள்ளிடபங்களைக்கொன்றுநின்
னிடரகற்றுவனென்றுமுன்னோனுடன்
கடுமையிற்சென்றகண்ணபிரானந்த
விடைகள்மேலடர்ந்தான்வெகுண்டேயரோ. (௨௧)

கடியவெவ்விடையேழுங்களனுறக்
கொடியகண்களினோக்கிகுரலினு
விழிகளஞ்சவதிர்த்தங்கெதிரிலா
விடமெனப்பரந்தேதுள்ளிமேல்வர. (௨௨)

வாலினைப்பற்றிச்சுற்றியும்வந்தடர்
காலினைப்பற்றிக்கல்லொடுதாக்கியு
மாலமொத்தங்கடர்விடையேழையுங்
காலனைத்துக்கடிதினிற்செற்றனன். (௨௩)

அந்தரந்தனிற்றுந்துமியார்த்தன
நந்தொலித்தனநாண்மலரொங்குமே
சிந்தியாடினர்தேவர்கள்சீறிய
வெந்நைதவல்லதியாவர்வல்லாரென்றே. (௨௪)

ஒப்பிலேழ்விடையைச்செற்றொலித்திடு
மப்பின்மீத்துயிலையன்றன்றோளினிற
றுப்புநறகொம்புபோலதுலங்கிய
நப்பினைத்திருநறதொடையிட்டனள். (௨௫)

அண்டமுண்டருளாரியன்றனோடுடன்
தெண்டையங்கண்கிளிமொழிநப்பினை
மண்டபத்தினமர்ந்துவயங்கிட
வெண்டவத்தினர்வேதியரெய்தினர். (௨௬)

அங்கியின்னிறையாகுதிபெய்தனர்
சங்குபேரிதழங்கிடச்சாகைமா
நங்கைநப்பினைநற்கநதாதனிற்
செங்கைமங்கலநாண்செறித்தானரோ. (௨௭)

மற்றுமர்குதிசெய்துவலமுறச்
சுற்றித்தேயுவைத்தூய்மலர்த்தாளிறை
பற்றவம்மிமிதித்துடபல்லாண்டெழ
வுற்றுநோக்கினரும்பருந்ததி. (௨௮)

தூயநந்தன்றுணைமலர்த்தாளின்மேல்
மாயநப்பினையோடுவணங்கவச்
சேயைமார்பினிற்சேர்த்தித்தழுவிட
வாயர்நோக்கியகமகிழ்ந்தாரரோ. (௨௯)

பீசனப்பின்னைதன்னுடனின்புற
மாசிலன்னமருந்திமகிழ்ந்தனன்
ஆசினற்கலனற்பதினாயிரந்
தாசரீயர்தனன்றாயமன்கும்பகன். (௩௦)

மாயனப்பின்னைதன்னுடன்மாமணித்
தூயதேர்மிசைதோன்றவலாயுத
னாயர்நந்தனொடுநகரோவிப்போய்ச்
சாய்விலாநெறிதாம்விரைந்தேகினார். (௩௧)

தேரின்மீதிற்சிறந்திடவேறியே
யேருறும்விருந்தாவனத்தெய்தினந்
தாரைசின்னம்பணிலந்தழங்கிட
மாரனென்னமனைபுகுந்தானரோ. (௩௨)

உருருசிந்தையசோதையுரோகணி
யருகுசென்றடிதாழ்ந்திடவன்பினால்
மருகிதன்னொடுமைந்தனையார்வமுற்
றிருகையினணைத்தேயின்பமெய்தினார். (௩௩)

தூயநப்பின்னையோடுதுலங்கிய
மாயவன்றனக்குப்பின்னுமானக
ராயர்நல்கியவாயிரமாதரை
நேயமோடளித்தன்புநிறைந்தனர். (௩௪)

கமலைநீளைபிராதைமந்தாரகை
சமனில்பாளிகைசந்திரிகையெழி
லமையுமெய்யிந்துவல்லியளப்பிலாக்
கமைகொளாய்ச்சியர்தோளணைந்தான்கண்ணன். (௩௫)

வண்ணமார்கலன்மார்பின்வயங்கிடக்
கண்ணனன்மதனுணுங்கவினுற
வெண்ணின்மங்கையரோடின்பமெய்தியே
மண்ணின்மீதுமகிழ்திருநாடனின். (௩௬)

நப்பின்னைப்படலமுற்றிற்று.
ஆ திருவிருத்தம் - ௩௨௦எ.

சரு. வது—அரிட்டாசுரப்படலம்.

அரிகேசவனுயர்மாதவனருளாளன்முகுந்தன்
திருநாயகன்மதுசூதனன்திருவிக்கிரமன்மா
நரகாசுரன்றனைச்செற்றவனாராயணன்மாயன்
கரிவீடுறவருள்செய்திறைபுகழேகழறுமினே. (௧)

அலவாயுதமெடுப்போன்மிகவழன்றோர்கையிறபுடைப்ப
மலைபோலுயர்பெலம்பாசுரனமடித்தானெனக்கேட்டுப்
பலையேயுறுகஞ்சன்சினமெழவேபுகையுயிரா
யலைவீசியகடலாமெனநகைத்தானனல்பிறங்ச. (௨)

கோரம்முறுமரிட்டாசுரன்கொடியோன்றிறற்கேசி
சோரன்சகடவியோமனனிவர்தன்னுடன்சொலவா
றாரம்முறுவிருந்தாவனத்தாயன்மகனறனை
நீர்சென்றினித்தெறுமின்னெனவிடுத்தானெருப்புயிர்ப்பான். (௩)

அரசன்சொலவரிட்டாசுரனழன்றேயொருவிடையாய்த்
தரையெங்கணுமலையகுரம்பெயர்த்துத்தழலுறமால
வரையொத்துயர்வாலானிவர்கொம்பால்வரைமுகிலக
விரியக்கடுவிடமாமெனவெழுந்தானசுரனிடைய. (௪)

மலையாமெனவெரிவின்மிசைவான்மமுகிலமொய்ப்பத்
தலைமேலுறுமிருகொம்புகள்சாலமமெனவுயர
வுலகேழுறுகுரலோசையிறகருப்பங்களுமுடைய
நிலமீதினிலுயாமேருவெனிசாத்தேயெதிர்ந்தனனால். (௫)

ஆயோர்களிட்டுத்தாலலையினமியோரெனவஞ்சி
மாயாவுனகைப்பெயம்மெனமலர்த்தாளமிசைவிழுந்தா
ராயோரொருரோழன்றுயாதோளமேறசரமவைத்தே
தீயோனவருசெயறேசகினனசிரித்தேயெதிர்நின்றனன. (௬)

மதியாதெதிர்நின்றனனைவரையாமெனவருவான்
கொதியாவடிவெருவக்குரலுறவாணடடர்ந்தடலுற
ததிரேடியவிறகொம்பிணைப்பிடித்தேயறத்தாளப்
பதினேழடிபினலுறறுவீழுந்தாறுடைப்பதைத்தே. (௭)

பதைத்தேயினவெழுந்தானிலனுயரும்பருப்பதம்போற
கொதித்தேயெதிர்நடந்தான்றனையிருகொம்பையும்பற்றி
யுதைத்தேயிருநிலத்தின்மிசையுறத்தள்ளினனுரத்தின்
மிதித்தானிறையரிட்டாசுரன்வீழ்ந்தானுயிர்மாய்ந்தே. (௮)

வாயாலெழுந்தருதிப்புனலாறாயெழமாண்டான
தீயேனிகரரிட்டாசுரன்றேவாதிகடிரண்டே
யோயாமலர்பொழிந்தேத்தினருயர்நாதமிமுழங்க
ஆயோர்திரடுதித்தாடினரையன்புகழ்பாடி. (௯)

வேறு. மாயோனையனபினமணிமார்பனைத்துமகிழ்ந்ததகோபனிலகத்
தாயாமசோதைமணிவண்ணனைதனையலறனைத்தழுவவே
யாயோயென்றயாதிரன்மாதாவந்துதுதிசெய்துநின்றுதொழச்
சேயோன்விளங்கிமனைமேவியின்புமுறவாழ்ந்தினத்திருநாள். (௧௦)

அரிட்டாசுரப்படலமுற்றிற்று. ஆக திருவிருத்தம் - ௩௨௧௭.

௪௬. வது—கேசிவதைப்படலம்.

ஆயன்முகுந்தனருளாளனுதியமரோர்தமக்குமுதல்வன்
றூயன்கராவைவதைசெய்துதந்திதுனியைத்துடைத்தபரமன்
மாயன்முராரியுலகேழுமுண்டமணிவண்ணனெந்தைவிசைய
னேயன்புராரியிடரைத்தவிர்த்தநெடுமாலினைத்துதிசெய்வாம். (௧)

கொடிதாயகஞ்சன்விடவேயதிர்ந்துவருகேசிவெங்குரகத
வடிவாகிமேருவரைபோல்நிமிர்ந்தவெரிவால்விண்மங்குலிரிய
வடியாலநந்தன்முடிதானடுங்கவனலாருகண்கள்பெரிதாய்க்
கடல்போலிரைந்துகடிவாயதிறந்துகருமேகமென்னவரவே. (௨)

பரியாகிவந்தகொடியோனடர்ந்துவரவாயர்தங்கள்பதிவிட்
டிரிவோரையஞ்சலெனவோதிமாயனெதிரோடநந்துசெலவெண்
ணுரைவாயின்வீழவிடிபோலதிர்ந்துநொடியாமுன்பினுயரு
மிருகாலின்மார்பின்விசையோடுதைப்பவிறைசப்பிநின்றிதுசெய்தான். (௩)

உரமீதுதைத்தவிருகாலையோர்கையுறவேபிடித்துவிசையால்
விரிவானவானின்மிசைவீசவோடுமொருநூறுவிறகடையுமாக
திருமாநிலத்தினவிழ்பூவோடுமாயபனைதயாவெழுந்துதனாயி
னுருமேறுபோலவதிராவெதிர்ந்துவருகேசிமால்முனுறவே. (௪)

வன்மீகமுற்றவரவாருமென்னவருமாவின்வாயினிடையே
தன்மாகரத்தைநுழையப்பெருக்கர்நடிபோலகட்டுளடர
நன்மாவினுக்கவுயர்பல்லொடிந்துநெரியையந்துநாலுமடையாய்ப்
பொன்மானகர்க்குநுயிர்போனதேசபுவிமீதருணடுவிழவே. (௫)

வரைபோலுருண்டுவிழுகேசிவாயினிடைபோயவறுதன்மினடையும்
திருமால்கைமீளவருபோதிரத்தநதியோடவேநுனைசொறும்
அருமாதவத்தரயிராணிகேளவனையருளும்தூயமலரோ
சொரிவார்துதித்துநனிவாழியென்றனரரோடுமவானிலுறவே. (௬)

வேறு. நந்தனுமசோதையுங்கடிதினண்ணித்தம்
மைந்தனையணைத்தனாமார்பினூடவே
சிந்தையின்மகிழ்ந்துரோகணிதன்சேயையு
மிந்திரைகேள்வன்றனிருந்தநாட்டனில. (௭)

கேசிவதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௨௨௪.

௪௭. வது—வியோமனப்படலம்.

வேலிணைவிழியினார்கலவிவெஃகினீர்
காலதூதுவர்கள்வந்தடையுமுன்கரி
யோலமென்றழைத்திடவுற்றகொற்றவன்
கோலமேனிணைந்துய்மின்கூற்றன்பாறவே. (௧)

மாயனுமுன்னவன்றானுமற்றுள
வாயர்கள்மைந்தருமாவின்கூட்டங்கள்
மேயவெங்கானிடைவிண்ணினோங்கிய
தூயதோர்காவினிற்றலங்கித்தோன்றினார். (௨)

மாயவனரசன்மந்திரியலாயுதன்
தீயதிருமனற்சேனைக்காவல
னாயர்கள்சிலர்களுஞ்சோரராஞ்சிலர்
தூயசேனையர்சிலராகித்தோன்றினார். (௩)

மையெடுத்தோடியேமறஞ்செய்சோரனாக்
கையினைக்கட்டுமின்காலைவாங்குமி
னெய்யுமினகுத்துமினிவர்கடஞ்சிரங்
கொய்யுமினென்றிவைகூறுவார்பலர். (௪)

பசியினுக்கசந்தனைபெடுந்துப்பறறினாங்
நசையுமக்கருந்துசற்கிடுதந்தநசெனா
விசையுநீரொன்றவர்கரத்தையொற்றியே
வசையுடனோடுவார்நகைப்பர்மீளுவர். (௫)

அரசனுக்காடிரண்டதனிரட்டியாண்
டுரைசெயுமந்திரிதனக்குநூறுமிவ்
வரிசையாய்மறிக்குறிதருவம்வம்மெனாச்
சரசமாய்த்தாம்விளையாடுங்காலையின். (௬)

கயவனுங்கஞ்சனேவிடக்கனன்றுவெம்
மயன்மகன்வியோமனானுருவமாறியே
யுயரரியுறைவனத்தவரொடொன்றியே
யயமெலாமுழையினுளெடுத்தடைத்தனன். (௭)

வைமயெனத்திரிதருமைந்தர்தங்களை
வெய்யவன்முழையினுள்விடுத்ததன்மையை
அய்யனுண்டறிந்தவனுக்கையைத்தழீஇக்
கையினைப்பிடித்துநீகள்வனென்றனன். (௮)

கையினைவிடுதியான்கள்வனன்றென்று
பொய்யினைப்புகலலும்புனிதன்விட்டிலன்
மெய்வரையெனவுயர்விண்ணினோங்கினா
னையனங்கவனுரத்தடிக்கமாண்டனன். (௯)

வியோமனன்மண்மிசைவீழ்ந்துமாண்டபி
னியாழமர்பாட்டொலிநிறையத்தேவர்கள்
வியானமேனடித்தருள்விமலவித்தகத்
தயாளுவேயென்றுதண்மலர்சொரிந்தனர். (௧௦)

தீயவன்றுணைவரைச்சேர்த்துமாபெல
வாயினிறகல்வினைவாங்கிவாயினாற்
றாயவனழைத்திடத்துன்பமோவிட
வாயர்தம்பதியினொளியொடெய்தினான். (௧௧)

வஞ்சகவியோமனன்மடிதல்கேட்டனர்
நெஞ்சினில்மகிழ்ந்துதாய்தந்தைநீதிமெய்
விஞ்சியவுரோகணிவிதாவினையதியே
மஞ்சனையணைத்துத்தாமுவந்துவாழ்த்தினர் (௧௨)

துன்பமாண்டொருவிடச்சார்ந்திக்கவே
யன்பினினபிணையரிவைதன்றுடன்
கம்பொனினமணிக்கலையணிந்தநாயக
னின்பமொடமர்ந்தினிதிருக்குமெல்லையின். (௧௩)

வியோமனவதைப்படலமுற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௩௨௩.

௪௮. வது - அக்குரூரப்படலம்.

மருளறவருளுறமறையினண்ணிய
பொருளுறுமுதல்வனைப்புகல்வருசியாத
திரள்களைமேய்த்திடாமேவசேயனை
யிருளகல்சிந்தையோடேத்துவாமரோ. (௧)

வடமதுராபுரிமன்னன்கஞ்சனுங்
கடியவனாதனைத்தக்கண்டவ
னடிமிசைபணிந்தருக்கியமளித்திடக்
கொடுவினையகன்முனிகூறலமேயினன். (௨)

முன்னம்யான்வருவனமொழியகட்சட்டிலே
பின்னருமுன்றொடிப்பிறந்தபெண்ணென
வுன்னியேயன்புவைத்துறுதியாயணிலாய
மன்னவநீயெனமற்றுங்கூறுவான். (௩)

உன்னாத்தகைத்துயரும்பரோகுமின்
மின்னிடையசோதைதான்பெறவிளங்கினோர்
மன்வசுதேவன்றன்மைந்தனாவ
னன்னெறிநந்தன்சேயாகிமன்னினான். (௪)

நந்தனுன்மறையமறைநெறியைநண்ணுவான்
சிந்தையின்மகிழ்சகாவான்செய்கையாற்
குந்தியின்முன்னவனுகுங்கொற்றவன்
மைந்தனையவன்வயின்மறைத்துவைத்தனன். (௫)

அன்றியுரோகணியருளயாரையும்
வென்றிகொளலாயுதவீரனுனைவ
னுன்றனக்கரும்பகையாகுமுத்தம
மன்றலர்துளவினுன்றினும்வாழ்ந்தனன். (௬)

ஆதலாலரசநீயவரைப்பேணிய
பூதனையுடனசுரர்பொன்றிய
வேதனையுற்றனைமேலிங்கெய்துவ
தேதெனவின்னமுமுணர்ந்துகொள்கென்றான். (௭)

நாறறுவனிவ்வுரைகேட்டலோடுமக்
கொற்றவன்றேறவிக்கொம்பனுருடன்
கற்றறிவிலாவசுரேவக்கன்வினைப்
பற்றிசீர்க்குருநிமொன்றுசைப்பகர்ந்தனன். (௮)

சக்குலினிமூர்த்தவன்முன்னிற்காட்டினர்
தங்கையையமைத்தனன்றனைச்செற்றிட
வங்கையின்வாளெடுத்தடர்த்தலோடுமச்
செங்கலிலெருந்தவன்விலக்கிச்செப்புவான். (௯)

பகைஞனைக்கொல்லிலாய்பழிவந்தெய்தவே
மிகமுனிந்தெதிரிலாவிவளைவிட்டிடேய
விகழ்வுனக்கெய்துமென்றியம்பலோடும்வெஞ்
சிகியுறவிலோசனன்செங்கைவாள்வைத்தான. (௧௦)

பருந்துசைசெய்தவர்தாளிற்பாய்ச்சிய
வெரிந்திடுநயனனேரிற்றுள்ளைத்தனை
னருந்தவனிவைமொழிந்தகன்றுபோயபின்
பொருந்தியவமைச்சரோடிவைபுகன்றனன். (௧௧)

அனகனாந்தபின்மைந்தராருயிர்
வானகத்தேற்றவரனயர்மலைந்திடக்
கானகத்தவர்களையழைத்துக்காட்டுநுஞ்
சேனைகள்சூழலில்வேள்விசெய்யுமின். (௧௨)

சகலன்முட்டிகனொடுசகலன்சாணூர
னிகரிலாமல்லர்களசுரர்நின்றனர்
மிகமுனிதுவலையாபீடமீதுறு
மிகழ்வின்மாபாதகனிங்குளானரோ. (௧௩)

ஆதலினந்தனில்லமருமைந்தரா
மேதலர்தமையழைத்திகல்செய்தேயவர்
சாதல்காண்குவமுயர்தனுவிழாச்செய
வேதியர்தமையழைவிரைவினென்றனன். (௧௪)

வேதியசெய்தியில்வேள்விசெய்வதற்
கோதினார்சதூர்த்தசியுயர்ந்தமாதிதி
ஆதலின்முயலெனவறைந்தபேரிகை
வீதிகள்கரிபரிவீரர்துன்னினூர். (கரு)

கன்னல்நீள்பூகம்நற்கதலியெங்கணு
முன்னதமாகவேயுயர்த்துத்தோற்றியே
துன்னியகொடியுறத்துலங்குமாலைக
ளன்னகரிலங்கிடநாற்றினாரோ. (கசு)

அரிவையரரசர்களந்தணாளர்கள்
விரதநன்முனிவர்வில்வேள்விகாண்குவார்
பரிவினோடெங்கணும்பரவித்தோன்றினார்
கரிபரிநிறைந்திடுங்கஞ்சனூர்தனில். (கஎ)

வரையெனவுயர்ந்தமாதனுவைவண்மைசேர்
தரணியிற்சகட்டின்மேற்கொணர்ந்துதாங்கியே
விரைவினின்மண்டபம்விளங்கவைத்திடச்
சரியிலாமறையவாவந்துசார்ந்தனர். (கஅ)

உயர்ந்திடுமுருத்திரமூர்த்தியோனுக்கு
வியந்திடுமருச்சனைவேள்விசெய்தபின
சயந்தருதனுவினமேறருமஞ்சூட்டியே
யயந்தனேநறுகநின்றாடிப்பாடியே. (கக)

தரணியின்கோட்புறுதனுவிழாச்செய
வரசனக்குரூரனையன்பினாலழைத்
திருகரம்பிடித்துனக்கியாரும்நேரிலை
யுரைசெயுங்கருமமொன்றுளதுகேளென்றான். (உ0)

குந்திதன்முன்னவன்கொடுமைகேட்டிதன்
மைந்தரைநந்தன்றன்மனையிலவைத்தன
னிந்தவெம்மொழிமுனியியம்பினானென்றுன்
சிந்தையினிடரினித்தீரவேண்டுமால். (உக)

நந்தன்வாழ்மனையினைநண்ணித்தேவகி
மைந்தரைவில்விழாக்காணவம்மெனாத்
தந்தவையாலவருயிர்தடிந்தியான்
சிந்தைநோய்தீர்வனீசெல்லவேண்டுமால். (உஉ)

விருத்தனுமுக்கிரசேனன்மேதினி
யருத்தியோடாளவெண்ணப்பன்றீங்குறு
கருத்திதேவகியவள்கணவனோடுமே
யொருத்தனைவைத்திலெனுயிருண்பனோ. (உங)

மகதனென்மாமனும்வாணன்சம்பரன்
சகமெலாமடர்ந்திடுந்தவக்கிர
னிகல்செய்சாலுவனரகாசுரனிவர்
சகியர்களாதலாற்றாழ்வொன்றில்லையால். (௨௪)

என்னுயிர்த்துணைவனீயேகிநந்தனோ
டொன்னலர்தமைக்கொணர்ந்துதவுவாயெனா
மன்னனக்குரூரனையணைத்துமாமணி
யன்னநற்கலன்களுந்துசுநல்கினான். (௨௫)

அறனில்வெங்கஞ்சனிதறையக்கேட்டிடு
மறனிலக்குரூரனம்மன்னனைநோக்கியே
திறனொடுமுயற்சியைச்செய்தல்வேண்டுமா
லிறைவயானேகுவனென்றுபோயினான். (௨௬)

இரதமதேறியக்குரூரனேகுவான்
சரதநான்மறைகளுந்தவருங்காணொணா
வரிதனைக்காண்பதற்களப்பில்காலமுன்
விரதமாதவஞ்செய்தேனென விளம்பினான். (௨௭)

பவமறப்பயோததிபாம்பின்மேற்றுயி
லுவமையிலரிபுகழொன்றுமில்லதாய்ப்
புவியினோர்புராணநல்லுணாபொருந்தினுஞ்
சவவலங்காரமாய்த்தளர்ந்துபோமென்றான். (௨௮)

வஞ்சகப்பிறவியுள்மருண்டுவீழ்ந்தவ
னஞ்சனவண்ணனுக்கடியனானபின்
விஞ்சினவினையெலாம்வேரினோடுமே
பஞ்சனலுற்றெனப்பாறுமென்றனன். (௨௯)

ஆசறுவினையெனுமளற்றிலாழ்ந்துவீழ்
நீசனென்பிறவியாங்கடலைநீங்கிட
வாசமென்மலருறுமங்கைகேள்வனா
மீசனைக்காணவெத்தவஞ்செய்தேனென்றான். (௩௦)

நீலமால்வரையுடன்கயிலைநின்றிடுங்
கோலமாமெனமலர்க்குயிலின்கொண்கனா
மாலினோடலாயுதன்றன்னைவண்மையா
ஞாலமேற்காண்பனென்றறைகுவானரோ. (௩௧)

வாணிவர்ந்தளந்துமண்வழங்குபாதத்தின்
யாணிறைஞ்சிடவிருகைகளாவென்
மேனியைத்தழுவிலென்வினைகள்பாறுமே
யூனுடைப்பிறவியுமொழியுமேயென்றான். (௩௨)

தீதறுகஞ்சன்றன்செப்பவெய்திய
தூதுவனென்றெனையிகழ்ச்சிசொல்வரோ
வேதமிலன்பருக்கெளியனாகிய
ஆதியாதலினருள்புரிவனாமென்றான். (௩௩)

அனகனுக்குறவுவெம்பகையிலாமெனி
னனிசிலாநலனசிலரைவந்தெனிற்
கனகமீகற்பகங்கலர்துற்புதுத்தியி
னுறுமுயிதருவபோலுறத்துவானென்றான். (௩௪)

வாசமெனவனசமாமதுலைப்பொற்
றூசுடன்கலன்களூர்தலங்கிநின்றரு
ளீசனற்பதத்தடிப்பொடியையென்மெயிற்
பூசுவன்கடிதெனப்புகனறுபோயினான். (௩௫)

வனமுறுமுலர்முனின்காட்டம்வானத்தின
கனமுறுவருத்தாறநகைசேர்ந்தபோ
லனகனையித்தினமடையடானசெய்நல
வினையெதுகொல்லெனமகிழ்ச்சிவிறினான். (௩௬)

குன்றெடுத்தாவினைக்காத்தகொற்றவ
னன்றுலகளந்தவனடியிறைஞ்சிவி
டென்றவெவின்றகஞ்சனசெய்யொப்பிலா
நன்றியையெங்ஙனம்நவிலுவேனென்றான். (௩௭)

புட்கொடியுவின்பின்போருமச்சுத
னடியினிறகொடியரவிச்சம்வாலையம்
படியவேபடியினிற்றிசமுபபாரினைப்
பொடியினமேறபுரணடனடியினவிழ்ந்தனனே. (௩௮)

மெய்மயிர்பொடிந்திடவிழிகணீருகக்
கைமலர்கூப்பியேகடிதுசெலதவான
ன்மைமுகிறசொழுந்தெனவயஙஙநின்றரு
ளையனைக்கண்டனனடியின்விழ்ந்தனன். (௩௯)

பாதமென்மலரிணைப்பற்றிவிட்டிலன்
பேதையேன்பிறப்பெனும்பிணியைச்சகிய
நாதனேநான்மறைதனக்குநண்ணலாச்
சோதியேயெளியைபோற்றென்றிடுயென்றான். (௪௦)

மானிலத்தழுந்துறவணங்குமன்பன்றன்
மேனியைத்தழுவினன்விளம்புவாறுனை
யானகனுநதுயிகுலத்துளாயினு
யீனமிலெந்தைநேராகும்நீயென்றான். (௪௧)

இனையவக்குரூரனுக்கினிதியம்பியே
மனைதனிலருக்கியம்வழங்கவாதனத்
தினிதுறவிருந்தனமருந்திருணிறை
நளிமலர்சாந்துடனன்னம்நல்கினன். (சஉ)

அருளினக்குரூரனைநோக்கியையநீ
விரைவினிலெய்திடசெயல்விளம்புகென்
றுரைசெயக்காந்தினியுதவுநன்மகன
பரிவினுரைக்கியபகர்தல்மேயினன். (சங)

வினையுறுகஞ்சனமுன்விளைவியோதிய
முனிவனுமெய்தினாரதாதிமுன்னமென்
றனையர்நீர்நந்தனிலசாரர்துளிரொன்றே
யனையவுமறைந்திடவனல்கொள்நெஞ்சினன். (சச)

தீயவன்றங்கையைச்சூரசேனன்சே
யாயவன்றன்னைத்தாவரநகைவாளினு
னேயெனமுடிக்கிடலோடும்நாரதி
தூயனாதமுனிவிலக்கச்செய்தாலவே. (சரு)

வாளிருந்தைக்கினின்வைத்தமர்றவர்
தாளினிற்பருத்தளைத்தகைவத்தபின்
ஞாளிகளிதனைநல்குமாறென
மூளும்வெஞ்சினைஞமைதேமுயறசிப்பால. (சசா)

வில்லுயர்வேள்வியைக்காணவேவிரைந
தெலலையிருமைபமுத்தாவுவாயெனுப்
புலியன்விரும்பிடப்பொருந்தியெய்தினே
னல்லியங்கமலக்கண்ணபவென்றனன. (சஎ)

கார்த்தினிகுதனிவைசபுறந்தாளியப
பாகதனினழைத்திடுமபாமன்கஞ்சனும்
மேவநதலபாலெய்துவன்வினைவினின்றெனு
நாகதகச்செய்கைடாணைசெய்தானரோ. (சஅ)

ஆயதோர்சானவியுயாதம்பதி
நாயகனுக்கியநந்தனெய்தியே
தூயவக்குரூரனைத்தழுவிச்சோர்விலா
வாய்மையினலனுமகிழ்ந்துகூறுவான். (சகூ)

மன்னவநின்கிளைமைந்தர்மற்றுளோ
ரின்னலெய்தாதிருந்தனர்களோவெனச்
சொன்னபின்றுன்மதிக்கஞ்சன்றாய்நெறி
யொன்னலான்கொடுமையையுராக்கலுற்றனன். (ரு0)

தங்கைதன்றனையரைத்தடிந்துதந்தைதாய்
சிங்கவெய்திடச்சிறைவைத்ததீயனும்
வெங்கணன்கொடுமையைவிளம்பிலேனென்று
விங்குநீயெய்தியதியம்புவாயென்றான். (௫௧)

வடமதுராபுரிமன்வில்வேள்வியைக்
கடிதினில்மைந்தருநீயுங்காணவாண்
டடைகுவாயென்றனக்கறையவேவினான்
கொடியவனென்றுரைகூறினானரோ. (௫௨)

தூயநற்காந்தினிசுதன்சொற்கேட்டனு
மாயர்தந்நாயகனளப்பிலாவனை
காயநற்சுவைகொள்பால்கறவையாவுடன்
மாயன்முன்னோனுடன்வழிக்கொண்டானரோ. (௫௩)

மாயவன்மதுரையினேகும்வாய்மைகேட்
டாயர்கள்மாதராரன்பினெய்தியே
தீயுறும்வெண்ணைபோலுருகிச்சிந்தையி
னோயுறவிவையிவைநுவல்வதாயினர். (௫௪)

கண்ணன்வாய்முகங்கடைக்கண்கள்காண்கிலோம்
பெண்ணெனப்பிறந்தியாம்பிழையெய்தினோம்
வெண்ணையுண்கள்வநீமீள்கிலாயெனில்
மண்ணின்மீதுழல்கிலமாய்வமென்றனர். (௫௫)

கடிமலர்நாயகிகாமமுற்றிடும
வடிவுறுமேனியின்வனசவேரியின்
கடைவிடுதெனவுன்றன்கடைக்கணோக்கினு
ளுடலுயிருருகுவோமுய்வதேதென்றார். (க௬)

ஐம்பொறியுனதிடத்தமுந்தவாவியுன்
வம்பணிதுளவணிபதத்தின்வைகவே
யம்பரத்தரிவையர்க்கதிகமாயத்தி
னிம்பரினணைத்தயாமெஙன்விட்டுய்குவம். (௫௭)

தனமுறுகலவைதன்னடிதயங்கவே
வனசமார்நீலத்தின்குறியெம்வாய்தொறு
மினவுனவிரலுகிர்ப்பொறியெம்மெய்யிடை
மனவணைத்துய்ந்தயாமொருவின்வாழ்கலம். (௫௮)

பரவையினமுதநேர்பவளவாயினின்
மருவுவேயிசையினெம்மனமுருக்கியே
குரவைகோத்துயிரொலாக்கொள்ளைகொண்டநீ
பிரிவையேற்றடுத்தனைப்பிடிப்பமென்றனர். (௫௯)

நேரிழையார்நமைப்பிரித்துநேமிகொள்
வீரியனோடுமேமதுரைமேவிடுங்
கோரவிகுரூரனையகுரூரனென்
றேருறுநாமமிட்டனர்களையாரென்பார (௬௦)

என்றுரைத்தெய்தியவெழில்கொள்மாதரை
யன்றுலகளந்தருளையனோக்கியே
மன்றலர்குழலினீர்வருந்தலீண்டிரு
மின்றுயான்வருவனென்றேகினானரோ. (௬௧)

ஆயர்களுவமையிலசோதைநாயகன்
றேய்விலாயமுனையிறபடிந்துசெல்லவே
மாயவன்காந்தினிமைந்தனுஞ்சிலோன்
தூயகாளிந்தியார்துறையிலெய்தினா. (௬௨)

வேறு. பேயினுயிர்முலைப்பாலோடருந்துங்கோமான்பெலமபனுயிர்வதைத்தவன்பித்திகையினிறபத, தூய்மையுறுகாநதினிதன்சுதனீராழ்கித்துலங்கிமேனின்றவனையபததுக்கண்டான, மாயமெனவெழுநதவனைக்கோட்டினோக்கிமறுத்துமபந்தனில்மூழ்கிமறறாங்கணடே, தீமையிலாவறநெறியைத்தேர்ந்தமன்னன்றிகழசோதியுருவினவிர்சிறபபைக்கண்டான்.

பேரொளியாயுயர்ந்ததொருநகரினுப்பண பிறங்குமணிமண்டபத்தின் மீதுவெண்மைச், சீருலவுவளையாழிகதைவாள சாரங்கநதிகழ்கரங்கடிரு மார்பிறகவுத்துவந்தோ, ளேருலவுகிரீடநுசல்வதளங்கணவாயெழிறகாதிற குண்டலம்பொன்னாடைபாதங, காரெழிலிமிசையினலாகமலமபூத்தகாட்சியுறுமேனியனைககணடானன்றே (௬௪)

சிரமுயர்ந்ததகதிகுஞ்சிமேகஙகளை டினகரன்சந்திரன் செவிகடிசை யோமொட்டுக,களையிலளப்பிலவுவரியுதரஙசொப்பூழ் ககனனகனகமரங்கருரோமமாகி, விளைகமழுங்கமலமலரிறையோன்சிந்தை விழித்தல்பகல் முகிழ்த்தலிரவாகியோங்கு, மொருவனெனவயஙகியருள சோதிதன்னையொளிகொள்மணிமணடபத்திறகணடானன்றே. (௬௫)

கடலுறுமீனெனவுமொளிருதும்பரத்தின்கனியினுறுமசகமும்போற் கருமேகத்தின், வடிவுடையான்வயிறறதனிலணடகோடிவயஙகியமொறறனைக்கண்டான்மறறும், படியினெழுதுகளெனநீண்டாழ்ந்தகன்றபரவையுறுமறலெனப்பல்லுயிர்களெல்லாம, நெடியவன்றனிடத்துதித்தேயமருந்தன்மைநெறியறியுமன்னவர்கோன்கண்டானன்றே. (௬௬)

சனந்தசனகாதியரைக்கண்டான்பூவிற் சதுமுகனைக்கண்டுசெசிதரனைக்கண்டா, னனந்தனைக்கண்டான்ககத்தின்பதியைக்கண்டானருள்செறிசேனாபதியைக்கண்டானன்ப, ரினந்தனைக்கண்டுளமகிழ்வான்கண்ணுளாரதாமிலஙகியுறுகோலமெல்லாஞ்சரந்தாற்போல, வனந்தனிலானிரைமேய்த்தகோமான்மீளமறைத்திடலுங்காணாமலெழுந்தான்மன்னோ (௬௭)

திரைகுரைகாளிந்திநதியயதனின்மூழ்கிச்சிறந்தமன்னனெழுந்துயர்ந்
தகரைமீதேறி, யரியினிணைத்தாணமலரினிறைஞ்சிநீயேயண்டரண்டமெ
ண்ணிலவாயவற்றினமேலா, யொருவனுமாய்ப்பேரொளியாயுயர்ந்தவாதியு
ன் னூரங்குமுன்னூவு பூண ராயென்று, கரைபுரளுமானந்தக்கண்ணீரசோ
ரக்களிப்புடன்கைதொழுதகண்ணனைக்கைதொழுதானன்றே. (௬௮)

அன்னவன்றனுடனிரதமீதினேறிப்பாழ்ந்தகன்ற யமுனையிகந்தப்பா
லேகித், தனனுகொடிமிடைசிகரமுபா[illegible]தோன்றததலங்குமதுராபுரி
யினெயிலைசசூழ, மினனிவெழுமுகிலனவாயிலங்கிநீலமேவிழுமியமாமலர்நி
றையமிழற்றுகின்ற, வன்னமயிலகோகிலநறசபோதம்பூவை மலிந்தெழுந்
தவாராமம்ரு[illegible]தாராமரோ (௬௯)

புரிசையசூழ்பிதநிலைசயினிலங்கியோஙகுப பறப்பொழிலினிருந்துபுய
ல்வண்ணன்மாயோன், வரிசையுறுகாந்தினிதன்மகனைநோக்கிவடமது
ராபுரிநகரசகுலகுருவேனனை, [illegible]கமபூரி தானடைநாபவிதனைமுன்போ
ய்விளமபெனவு கியநிர [illegible] நிலை [illegible], முரனுடையமுனறிலிடைக்கரு
சன்முன்னாமுருக்கனவரவதனையவ [illegible]ரொழிந்தானன்றே (௭௦)

அச[illegible]டலமு[illegible]று
ஆ[illegible]விரு[illegible] -௬௩0௪

---

௪௬. வது—தாருகன்வதைப்படலம்.

தாலமிசைமறைமொழிதவ [illegible] டம நூறுந [illegible] ணி [illegible]டதநாணிருநகிடினு
நதாய்கைமீதிற், பால[illegible]சகிரிநதிநகளநற்ந் பி[illegible]ப்பருவமுறப்
பாவையாதநககிலி[illegible]ருயாத, ம[illegible]றுமொதினைமூபபடரநோய்கள்வெ
ய்யதுயர்முடிகவிநதவுடலவிடடேகி, காவலரிடுநகிடையினழுநதாமுன்ன
ர்க்கண்ணனெடுமபுகழினையாடகழரியுமயாம (௧)

சிநனமகிழகாநதினிநன்சிரயவாறோ[illegible]ரசென்றிடலுஞ்சிறந்துயா
ந்தபூங்காத்தன்னி, எநதனுடருயாதிர[illegible]மலாஙகூடிநலனுறவேமகிழந
திருப்பப்பொதுவாதஙகள, [illegible]நதருடனாமரிவனனமருங்கினெய்த
வானூறுசெஙகதிருடபாவிழியும்போழுதி, னிநதிரைநாயகன்மேககொ
ழுந்துபோலவிலஙகிமதுராபுரியினைகிறுதல. (௨)

வேறு. சதுரன்ரு[illegible]ரைக்கணணின[illegible]சாரளை
வெதிரிலவாமெயயனேனழுலகாளபவன
முதிரமும் [illegible]தயானைகளமுநதிய
மதுரையானககாவீதியின்வநதனன் (௩)

கரிநிறைந்தனகார்முகிலாமெனப்
பரிநிறைந்தனபாய்திரையேலவே
வரிநிறைந்தவரிவையாதங்குழல்
டரிநிறைந்தனபூரணபொற்குடம (௪)

தோரணங்கணிறைந்து துலங்கிய
வாரணங்கள் முழங்கி மலிந்தன
பாரணங்குதவஞ்செய்துபண்பிரும்
நாரணன்கடிதேருநல்லாவணம். (௫)

கன்னல்பூகங்கனிகொள்சுரும்பிவந்
துன்னுபங்கயமாலைதுலங்கிய
வன்னம்போன்றவர்தோள்கழுத்தாவண
நன்னலத்திலைநத்திவந்தாலென. (௬)

குயிலினம்மெனவெய்யனக்குழலினர்
மயிலினம்மெனமங்கையர்வந்தனர்
வெயிலின்வெண்மையுருவபோல்வெயில்
தயர்வமாயனழகுகண்டாரரோ. (௭)

செய்யகண்ணிதென்றருசனைக்கிட்டுவை
ஊயன்வீதியடைந்தனனென்றலுந்
துய்யமையுறுதூரியக்கோலுட
னெய்தமாயனிலங்கநகைத்தனன். (௮)

தூசுமென்மருங்கிற்சுற்றும்வேலையின்
மாசிலச்சுதன்வந்தனனென்றலு
மேசெறிந்திலளாடையிழுத்தெய்த
வீசனென்னகைசெய்தினிதேகினன். (௯)

இழையொண்முத்துந்துளையிடுமெல்லையின்
மழைதடுத்தவன்வந்தனனென்றலுங்
கழைகடோளிதரளங்கைந்நூலுடன்
றெழுதுமாலுறவீதியிற்சோர்ந்தனள். (௧0)

கொங்கைபாற்குழவிக்கருள்வேலையிற்
செங்கண்மானகர்சேர்ந்தனனென்றலு
மங்கைமார்மகவைப்பிறிந்தேவந்து
பொங்குமன்பினிற்கூடலப்புகுந்தனர். (௧௧)

கலையுஞ்சோரக்கருங்குழல்சோரநன்
முலையின்மீதணிமுத்தஞ்சிறந்திட
மலரிணைங்கணைமாமதன்வாங்கிய
சிலையினுலெய்யவேதிகைத்தாரரோ. (௧௨)

பால்குடித்தனைபாம்பினடித்தனை
மால்கொடுத்தனைவந்தனையாமென்பார்
வேல்கணொத்தகணுரியர்வீதியின்
மாலடிப்பதுமங்கண்டுமொழ்கியே, (௧௩)

கண்ணனென்பர்விற்காமனிவனென்பர்
வெண்ணெயுண்டருள்வித்தகன்றுனென்பர்
மண்ணின்மீதில்வருங்கொண்டல்தானென்ப
ரண்ணலைக்கண்டவாயிழையார்களே. (கச)

கரியமேனிக்கருமுகிற்றுனென்பார்
வரிகொணீள்விழித்தாமரைதானென்பார்
சரியிலாநகைதண்ணிலவாமென்பா
ரரியைஞெள்ளலிற்கண்டணங்கார்களே. (கரு)

நந்தகோபன்செய்நற்றவமாமென்பா
ரிந்தமாநிலஞ்செய்தவமாமென்பார்
சிந்தையாரக்களிப்பர்தெருவினில்
வந்தமாயனைக்கண்[illegible]ழி[illegible]ரார். (கசு)

ஐகொள்மெய்[illegible]சோதைதிருமகன்
கைகள்க[illegible]ல்முகங்க[illegible]கள்செந்[illegible]ரை
மைகொள்நீலமரகதமேனிய
னெய்திறனெனபரேர்க்கிழைய[illegible]ர்களே. (கஎ)

வேயி[illegible]ழிசைகே[illegible]டுவிரும்பிய
வாய[illegible]ர்பா[illegible]ரருந்[illegible]நன்றென்பார்
தாயசோதை[illegible]வம்[illegible]ரி[illegible]ரமென்பார்
மாயன்மேனியை[illegible]க்க[illegible]டம[illegible]ந்தை[illegible] (கஅ)

சோலுங்கன்றின்குழூஉமிவனு[illegible]டும்
பாலும்வெண்ணெயும்நெய்யும்[illegible]ரி[illegible]தெமு
பால்கொள[illegible]ட[illegible]ளமங்கைபாகூ[illegible]ரயுந
சிலநற்றவஞ்செய்[illegible]தெ[illegible]பார்சிலர். (கக)

கேளிரெங்களும்வீதிசென்[illegible]ரு
வேளிரங்கிவணங்கிடு[illegible]ணியை
வாளரங்களமநித்திடுகண்ணியர்
சாளரங்களிற்றுமுற்றநோககிஞர். (உ0)

நிரைகொளோடைநிறைவன சங்கள்[illegible]யா[illegible]
றெருவினுனணந்தோன்றச்சிறந்திடு
டரிவைமார்கணிறேகினராசையே
மருவவீதியிலேகினன்மாதவன். (உக)

வந்தகாரியமுற்றுகவஞ்சகர்
வெந்துநீறெழவேதமவிளங்கவே
மைந்தநீயென்றும்வாழிவாழியென்
றந்தணாளர்கள்கூறினராசியே. (உஉ)

இந்திராதியர்வேதனிருடிகள்
கந்தநாண்மலர்வீசிசகளித்தனா
நந்தகோபன்செய்நற்றவத்தெய்திய
மைந்தன்வீதியினெய்திவயங்கவே. (௨௩)

கழைகொடோளிகளெண்ணிலர்மையிருற
வெழுதுமாலிற்றவண்டுமயங்கவே
அழகின்விஞ்சியவைங்கணையோன்றந்தை
யெழில்கொள்வீதியினெய்திடுமெல்லையில். (௨௪)

கொடியனாகியகஞ்சன்றன்கோயிலி
னடைகுவான்றுகில்மைகளைவிப்பவன்
படியிற்பல்வனப்பட்டுடைகொண்டுதான்
வடிவனாகியமாயன்முன்னெய்தினன். (௨௫)

உம்பர்தம்பரனுற்றவன்றன்னையே
யம்பரம்பெனக்கின்றளித்தாயெனி
லிம்பரின்னலமெய்துவையென்னலும்
வெம்பினன்றுகில்வெளுப்போனாகுவான் (௨௬)

தழையுறும்மடிநாசிகைவிததுயர்
பழுவந்தன்னிறந்திரிந்துபல்லாசகளோ
டுழலுவாய்கஞ்சமன்னனுடுத்திடு
மிழைநலத்துகில்சுற்றுதையோவென்றான். (௨௭)

துதிபெருத்தொருந்தாசிலிருப்பரிவை
மதியினீமொழிந்தாயெனமாசவன்
வெதிருறுங்கரத்தாற்குத்தவீழ்ந்தவ
னுதிரம்வாயுகவேயுருண்டானரோ. (௨௮)

தூயதூசுகொண்டேகிடுந்துன்மதி
மாயவேகலிங்கப்பொதிவைத்தவ
னேயமாகுநங்கிளைஞர்கள்நின்றிலா
டீயங்கணடைசென்றாயனையோடினார் (௨௯)

வேறு. தாருசன்மடிந்துவீழக்கவினுறுகலிங்கந்தன்னை
ஆரியனணிந்தபின்னரலாயுதனுடனையர்க்கும்
பாரினில்வறிஞர்கட்கும்பரிவிராசப்படங்களீய்ந்து
தேருறுவீதிதன்னிறநிகழவேயெய்தும்வேலை. (௩௰)

தாருகன்வதைப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௩௭.

ரு0. வது—சுதாமாப்படலம்.

ஆலமேபோலுமாலிமடியமாலியவானஞ்சி
ஞாலமேலிலங்கையோவிநாகலோகத்திற்பாறச்
சீலமார்கருடன்மீதிற்றிகழ்ந்துயர்சிகிரியேவுங்
கோலமாலிருடிகேசன்புகழினைக்கூறியுய்வாம். (க)

தூயவன்சுதாமாவென்போனறலங்கியதொடையல்சோபபோன்
மாயவன்றன்னைநோக்கிவணங்கினனெழுந்தோயாடி
நாயினேனிருக்குமில்லினுயகவாகவென்றே
தீமையில்குணத்தோன்சொல்லச்செவ்வனுஞ்சென்றனனறே. (உ)

அரியவன்மனையினெய்தவாங்கவன்மகிழ்ந்துதன்னிற்
றெரிவையுஞ்சிறுவர்தாமுந்திகழ்கிடையின்பத்து
பரிவினுதனத்திருத்திப்பாமலர்பாதந்தனை
யருவினையொருவவுட்கொண்டாடிமெய்ப்புளகமானார். (ங)

தள்வங்கல்லாரமௌவல்சண்பகஞ்சாதிநாகந்
துளவமம்போருகம்பார்துலங்கியவிலஞ்சிமாசங்
கிளரும்பாடலத்தின்மொய்புகழ்கெழுமியகொன்றைசெவ்வலா
முளமகிழ்ந்தையன்மார்பினணிந்துநின்றுருகினானல். (ச)

அலங்கலையணிந்துநின்றவன்னையாளிறைஞ்சி
யிலங்கியசெல்வமெல்லாமெய்திப்பின்னிலையில்லாமா
றுலங்கியகதியினவாழ்தியென்றளிசுராதுசொல்ல
நலங்கிளர்சுதாமாவத்திரவினறன்மனையினனுமானரோ. (ரு)

என்பிலாப்பிறவியாகியிழிவினையடைந்தவெம்முன்
னன்பெனக்கருடியென்றேயாங்கவன்மொழியக்கேட்டிந்
துன்பகல்சிந்தையாய்நீபெறுகுவையென்றுதூயோ
னின்பமோடவனைநல்லெனரேறிறைநம்வைகுமெல்லே. (சு)

சுதாமாப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௩௩

ருக. வது—திரிவக்கிரிப்படலம்.

சங்குசக்கரம்வாள்சார்ங்கந்தண்டெழிறகரங்களோங்க
மங்குன்மீவனசமபூத்தமாண்டெனவயங்குமேனி
செங்கதிருதையமேலச்சிறந்திடுங்கிரீடந்தோன்றக
கங்கையார்பதத்தின்வானமளந்தருள்கண்ணன்வாழி. (க)

தேனமர்குழலினார்கள்சிறந்துவந்தெதிரினேக்க
நானமெய்கமழவாதிநாரணனெய்தும்வேலை
பூனவில்வளைந்தபோன்றுண்டொளியறுகுரூபியாகுங்
கூனிநற்சுகந்தங்கொண்டுகுறுகினள்வீதிதன்னில். (உ)

அய்யனுண்டவளைநோக்கியாரிடைச்செல்கின்றாய்நீ
துய்யநற்சுகந்தந்தன்னைத்தருதியோவென்றுசொல்லக்
கையினிற்றொழுதேயன்பிற்கண்ணினீர்புரளநின்று
மெய்யநின்றாதிநானென்றவளிவைவிளம்பலுற்றாள். (௩)

மாமையில்கூனிமூன்றுவக்கிரியாகுமென்பேர்
தூய்மையில்கஞ்சனார்க்குச்சுகந்தமெய்ப்பணிவன்கண்டாய்
நீயிவணெய்தப்பெற்றேனெனக்குநேராருமில்லை
யாயனுமுன்மெய்தன்னிலணிகுவன்சுகந்தமென்றாள். (௪)

குங்குமங்கலந்தசந்தம்பாளிதம்பனிநீர்கொண்டு
செங்கையாற்குழைத்துமார்பிற்சொட்டிச்சிந்தூரர்தன்னைத்
திங்களுளனந்தான்றிகழ்வுறுநுதலிற்றீட்டி
யங்கணமாலழகுநோக்கியடிமிசைவணங்கிநின்றாள். (௫)

சிந்துரஞ்சுகந்தமெல்லாந்திகழ்வுறப்பணிந்துநின்ற
வந்தமில்கூனிதன்னையங்கையாலெழுந்துமார்பு
மிந்திரைகொழுநன்பற்றியெடுத்தனன்றிரிந்தமேலோங்கு
சுந்தரியாகினளுய்யமானவ [illegible]. (௬)

மாதவராகிகூறியகிருதத்தனையாளமீதி [illegible]
றூதவிழ்மலர்க்கொத்தார்த்தாமனவாசைகூறநா [illegible]
பூதலந்தன்னிற்கூனுமப்புன்மையாமுருவையோவிச்
சீதரன்முன்னர்நின்றாள்செய்யவளாகிமாதோ. (௭)

வேறு. மூடவர்சேடகிலர்கண்ணிலர்முங்கையா
னொடியிற்கூனிமிர்மங்கையைநோக்கியே
லடியிற்றாளைமெய்யப்பிநின்றாடினார்
